
Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



வைரம்
பொன்
வெள்ளி
நகைகளுக்கு
P.A. ராஜ செட்டியார் பிரதர்
தந்தி: ராஜா-கோயமுத்தூர்-போன். 218A



நாடெங்கும்
அழகிற் சிறந்த மாதர்கள்
உவந்து உபயோகிப்பது
மைசூர் சந்தன சோப்
அது அவர்களது அழகை நன்கு பாதுகாக்கிறது. இந்த சோப் ஒன்றுதான் தங்களது அழகை பாதுகாக்கவல்லது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்
மைசூர் சந்தன சோப்


கல்கி




KALKI ஜுலை 9. 1944 4 அணா

-உம்மன்


ஆகஸ்ட் தீர்மானம் சட்டப்படி காலாவதியாகி விட்டது என்று சட்டநிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.
ஆகஸ்ட் தீர்மானம்
இந்தியாவில் உற்பத்தியாகும் காகிதத்தைக்கொண்டு வெளியாகும் பத்திரிகைகளை, சமீபத்தில் வெளியான காகிதக் கட்டுப்பாடு உத்தரவு கழுத்தை நெரிக்கிறது.
ஒரிஸ்ஸாவில் மாகாணசுயாட்சி வேஷத்தைக் கலைத்துக்கொண்டு செக்ஷன் 93 தன் சுயரூபத்தைக் காட்டியிருக்கிறது.


"காகிதத்தை வீணாக்காதே" சர்க்கார் பிரசாரம்
ஆபீஸ் நாற்காலியிலுள்ள மூட்டைப்பூச்சிகள் தொந்தரவைப் பற்றி ஆபீசர் மிஸ்டர் பக்பேர் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு ரிபோர்ட் அனுப்புகிறார்.
1
சுற்றி வளைத்துக்கொண்டு அந்த ரிபோர்ட் உள்நாட்டு இலாகாவுக்கு வரும்போது இத்தனை பைல்கள் சேர்ந்து விடுகின்றன.
2
மேற்படி மூட்டைப்பூச்சிகளின் பூர்வோத்தரத்தையும் யோக்கியதையையும் விசாரிப்பதற்காக ரிபோர்ட் ஸி.ஐ.டி. காரியாலயத்துக்கு வரும்போது பைல்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிவிடுகின்றன.
3
அந்த மூட்டைப்பூச்சிகள் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவை என்று தெளிவாகி விட்டபடியால்; தக்க நடவடிக்கை எடுக்கும்படி ரிபோர்ட் ராணுவத்தாருக்கு வரும்போது, பைல்கள் இன்னும் வளர்கின்றன.
4
மூட்டைப்பூச்சிகள் கலகம் செய்தால், அதை ஒடுக்க 10,000 துருப்புகள் தயாராக இருப்பதாக உள்நாட்டு இலாகாவுக்குப் பதில் வரும்போது பைல்கள் இன்னும் குவிகின்றன.
5
கடைசியாக, உள்நாட்டிலாகா, மூட்டைப்பூச்சிகளின் எண்ணிக்கை நிச்சயமாக எவ்வளவு என்பதை அறிவிக்கும்படி மீண்டும் ரிபோர்ட்டை ஸி.ஐ.டி.க்கு அனுப்பும்போது ஏற்பட்டிருக்கும் பைல் நிலைமை இதுதான்!
6



நல்ல உயர்ந்த பண்டங்களையே விரும்புவோருக்கு

நமக்கு கட்டாவிடினும் நம்மில் எல்லோரும் மேன்மை யான பண்டங்களையே விரும்புகிறோம். சிகரெட்டில் சிறந்த புகையிலையை உபயோகித்தால்தான் அது விரும்பி பலராலும் சிறந்ததென்று சொல்லப்படும். டிலக்ஸ் டெனார் சிகரெட் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. பலரும் வாங்கி ஆனந்தமாக அனுபவிக்கலாம். உத்தர வாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலைகளாலேதான் டிலக்ஸ் டெனார் சிகரெட்டுகள் செய்யப்படுகின்றன.

tenor

டி லக்ஸ் டெனார் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

is truly a de Luxe Cigarette


JAMES CARLTON LTD. LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!



நீரு

லக்ஸ் டாய்லட் சோப்பை சிரத்தையுடன், தவறாமல் உபயோகித்து நீரு தன் சருமத்தை மாசில்லாமலும் அழகாகவும், வைத்துக்கொள்கிறார். என் சருமத்தை பளிச்சென்றும், மிருதுவாகவும் வைத்துக்கொள்ள நன்றாக அழுக்குப் போக்கும் லக்ஸ் டாய்லட் சோப் நுரையில் தான் எனக்கு நம்பிக்கை என்று அவர் சொல்லுகிறார். அநேக பேர்பெற்ற இந்திய சினிமா நட்சத்திரங்கள் இதே விதமாகத்தான் தங்கள் சருமத்தை பாதுகாக்கிறார்கள்.



லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 151-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED




இரு இலையும் ஒரு மொட்டும்...

'இரு இலையும் ஒரு மொட்டு'மாகப் பறிப்பதுதான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள்தான் பறிக்கப் படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.


ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தம் புதிதான சரக்குகள் அடிக்கடி வினியோகிக்கப்படுகின்றன. 'இரு இலை ஒரு மொட்டு' அதன் உன்னதமான மணத்தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறைதான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களிலிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக்கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடத்தைத் தொழில் ஆலைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின புத்தம் புதிதான குணம், திருப்தி யளிக்குந்தன்மை, இவற்றை ரஸிக்க விரும்புபவர்களுக்கு "டார்ஜீலிங் ப்ளெண்ட்" தான் சரியான தேயிலை.



ப்ரூக் பாண்ட்



சக்தி வாய்ந்த தமையன் இருக்க, மகுடத்தை-தான் சூடிக் கொள்ள வேண்டும் என்கிறீர்களே! பெரியவர்களாகிய நீங்களே தர்மம் அது என்கிறீர்கள்!

மூன்றுல கினுக்கும்ஓர்
முதல்வ னாய், முதல்
தோன்றினன் இருக்க,
யான்
மகுடம் சூடுதல்
சான்றவர் உரைசெயத்
தருமம் ஆதலால்,
ஈன்றவள் செய்கையில்
இழுக்குண் டாகுமோ?'

[செஞ்செவே: உண்மையான உணர்ச்சியுடனேயே; அயர்ந்தனன்: மயக்கமுற்றான்.]

பரதன் பட்ட பாட்டை இன்னது என்று சொல்ல முடியாது. உடல் நடுங்குகிறது; வாய் குழறுகிறது. தாங்க முடியாத துன்பத்தால் கண் இடுங்குகிறது. நெஞ்சம் கரைகிறது. உயிர் ஒடுங்கிவிட்ட மாதிரி அசைவற்று இருக்கிறான். நேரம் கழித்து எப்படியோ உணர்ச்சி வந்தது.

நடுங்கினன் நாத்தடு
மாறி, நாட்டமும்
இடுங்கினன், மகளிரின்
இரங்கும் நெஞ்சினன்,
ஒடுங்கிய உயிரினன்,—
உணர்வு கைதரத்
தொடங்கினன் அரசவைக்(கு)
உள்ளம் சொல்லுவான்.

[உணர்வு கைதர: ஒரு வகையாக உணர்ச்சி வந்து உதவ; தொடங்கினன் அரசவைக்கு உள்ளம் சொல்லுவான்; அங்கு கூடியுள்ள சபையோருக்குத் தன் மனநிலையைச் சொல்லுவதற்கு ஆரம்பித்தான்.]

பரதன் சொல்லுகிறான்: 'மூன்று உலகத்தையும் சேர்த்து ஆளும்

சாஸ்திரங்களை எல்லாம் கற்ற உயர்ந்த மரியாதைக்குப் பாத்திரமாயுள்ளவர்கள் பரதனது வாய்க்குள் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். "என்னைப் பெற்ற கைகேசி இருக்கிறாளே, அவளுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் என்ன?" என்று கேட்கிறான். ஆங்காரத்தின் தொனி எப்படி வருகிறது, பாருங்கள்!

ஒரு கேள்வி!



"என்ன ஸார்! ஊர்லே உளுந்தே அகப்படலே, இட்லி கொண்டு வா என்றால் எங்கே ஸார் போகிறது?"

"போம் ஐயா, போம்! இத்தனை நாள் இட்லிக்கு உளுந்துதான் போட்டீர்களாக்கும்!"

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

69. நீங்களும் கைகேசிதானே!

மக்களது மனப் பாங்கை யெல்லாம் அறிந்தவர் வசிஷ்டர். அதிலும் உயர்ந்த மனப் பாங்குகளை கண்கறிந்தவர். பரதனுடைய மன நிலையையும் இதயம் ஒட்டிப் பார்க்கிறார். ரொம்பவும் அனுதாபப் படுகிறார்.

"ராமன் காட்டுக்குப் போய்விட்டான். நீ சக்கரவர்த்தியாக இருக்கவேண்டும்" என்று பரதனைப் பார்த்து எப்படிச் சொல்லுகிறது?

ஆனாலும் சந்தர்ப்பம் அப்படி யிருக்கிறது. அரசன் ஒருவன் இல்லாமல் நாட்டின் கதி என்ன ஆகும்? நாட்டை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்கிற ஆத்திரத்தில் மனசைத் திடப் படுத்திக் கொண்டு பரதனிடம் பேச ஆரம்பிக்கிறார்.

பீடிகையாகச் சொல்லுகிறார்: பிரம்மா சிருஷ்டித்த எந்தப் பொருளானாலும் சரி, அது வானத்தில் இருந்தாலும் சரி, இந்த பூமியிலிருந்தாலும் சரி, அரசத் தத்துவம் என்று ஒன்று இருந்துதான் பாதுகாத்து வருகிறது. அந்தத் தத்துவம் இல்லாமல் போனால் எதுவும் சின்னா பின்னமாகிப் போய் விடும்.

இவ்வாறு பீடிகையை முடித்துக் கொண்டு, பிறகு விஷயத்துக்கு வருகிறார். மிக்க பரிவுடனேயே பேசுகிறார்.

"அப்பா, பரதா! உன் தந்தையோ இறந்து போய் விட்டான். அண்ணனும் காட்டைத் துறந்து விட்டான்" என்று ஆரம்பிக்கிறார்.

'உந்தையோ இறந்தனன்,
உம்முன் நீத்தனன்,
வந்ததும் அன்னைதன்
வரத்தின் மைந்தநீ,
அந்தமில் பேரர(சு)
அளித்தி; அன்னது
சிந்தனை எமக்(கு)' எனத்
தெரிந்து கூறினான்.



[வந்ததும் அன்னை தன் வரத்தின்: சக்கரவர்த்தி உன் அன்னைக்கு ஒரு வாக்கு அளித்திருந்தான். அந்த வாக்கின்படியே ராஜ்யம் உன் கைக்கு வந்தது: அந்தமில் பேர் அரசு அளித்தி: என்றென்றும் நிலைக்க வேண்டிய இந்தப் பெரிய ராஜ்யத்தை ஆளும் பொறுப்பை மிக்க கருணையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும், அப்பா! அன்னது சிந்தனை எமக்கு: அப்படி நீ செய்ய வேண்டும் என்பது எங்களுக்கு ஒரே கவலையாக இருக்கிறது: தெரிந்து கூறினான்: பரதனுடைய சோகத்தையும் துன்பத்தையும் தெரிந்து கொண்டவராய்ச் சொன்னார் வசிஷ்டர்.]

ரொம்பப் பக்குவமாகத்தான் வசிஷ்டர் சொன்னார். ராஜ்யத்திலுள்ள மக்கள் எல்லாரும் தஞ்சமாகவே உன்னை அடைகிறார்கள் என்றுதான் சொன்னார்.

'தஞ்சம் இவ் உலகம், நீ
தாங்கு வாய்!' எனச்
செஞ்செவே முனிவரன்
செப்பக் கேட்டலும்,—
நஞ்சினை நுகர்என
நடுங்கு வாரினும்,
அஞ்சினன், அயர்ந்தனன்
அருவிக் கண்ணினான்.

சரிக்கச் செய்கிறாயோ? பூரா விவரமும் அறிந்து எழுது.

எனக்குக் கால் கொஞ்சம் தேவலை. இப்பொழுது எழுந்து உட்காருகிறேன்.

சீனு."

○

"சீனு,

நேற்று தாசில்தார் வீட்டிற்குப் போயிருந்தேன். மனுஷன் ரொம்ப நல்ல மாதிரியாக இருக்கிறார். வெகு நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன். வீட்டில் ரசிகத் தன்மையுள்ள வேறு யாரோ இருக்கவேண்டு மென்று எழுதினேனல்லவா? அது யார் என்று கண்டு பிடித்து விட்டேன்.

உனக்கு உடம்பு குணமடைந்து வருவது பற்றிச் சந்தோஷம். நீ எழுந்து நடக்கும் ஸ்திதி வந்ததும் எனக்கு எழுது.

ராஜு."

○

"பிரிய ராஜு,

உன்னைப் போல் மூளை கெட்டவன் இந்த உலகத்தில் நீதான். ஒன்றரை அணா செலவு பண்ணி ஒரு கவர் போடுகிறவன் என்ன சமாசாரம் எழுதுகிறாய்? உடனே அந்த நண்பர் யாரென்று எழுது.

நான் நடக்க இரண்டு வாரமாகும். இப்பொழுதுதான் மெள்ள மெள்ள அடி எடுத்து வைக்கிறேன்.

சீனு."

○

"என்னருமை சீனு,

நீ ஓர் அவசரக் குடுக்கை என்பது இப்போதுதான் தெரிந்தது. நான் சொல்ல மாட்டேனா? ரிடையர்ட் தாசில்தார் வீட்டில் அழகான ஒரு பெண் இருக்கிறாள். எனக்குக் கலியாணம் ஆகிவிட்டதே என்று வருத்தப்படுகிறேன். மீனா என்று பெயராம். அடாடா! என்ன அழகாகப் பாடுகிறாள் தெரியுமா?

ஒரு விஷயம் கேள். ரொம்ப ரஸமான விஷயம். உனக்கு ரொம்பப் பிடிக்கும். அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். நீ நடக்க ஆரம்பித்து விட்டாயா?

ராஜு."

"ராஜுவுக்கு,

உன் கடிதம் பார்க்க ரொம்ப சந்தோஷம். அந்த ரஸமான விஷயத்தை உடனே எழுது. எனக்குக் கால் குணமடைந்து நடக்கிறேன்.

சீனு."

○

"சீனுவுக்கு,

நீ நடக்கிறாய் என்பதைக் கேட்க எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம்.

நான் தாசில்தார் வீட்டுக்குப் போயிருந்த பொழுது, ஏதோ பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது உன்னைப்பற்றிப் பேச்சு வந்தது. கிழவரும் உன்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் கேட்டுக் கொண்டார். நான் உன்னைப்பற்றி எப்பொழுது பேசினாலும் அந்தப் பெண் அக்கறையாக நின்று கவனிக்கிறாள். நேரில் உன்னைப் பார்த்து விட்டால் எப்படி எல்லாம் நடக்குமோ?


ராஜு."



ஒரு நாள் ராஜுவுக்கு "புறப்பட்டு விட்டேன். சீனு" என்று ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டு, அடுத்த நாளே ராஜுவைத் தேடிக்கொண்டு சீனு வந்து சேர்ந்தான். ராஜுவோ கிராமத்தில் இல்லை. தாசில்தார் வீட்டுக்காவது போகலாம் என்று நினைத்து எதிர்வீட்டைப் பார்த்தான். என்ன மாயம்! அந்த வீடு இருக்கவேண்டிய இடத்தில் ஒரு பொட்டல் நிலம்தான் இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு சீனு ஊர் திரும்பினான். அங்கு அவனுடைய அறையில் ராஜு உட்கார்ந்திருந்தான். ராஜு அவனைக் கண்டதும், "சீனு! என்னைக் கோபித்துக் கொள்ளாதே. நீ பந்து விளையாடிக் காலை ஒடித்துக் கொண்டு ஆஸ்பத்திரியில் கிடந்தாயே. மனோ விசாரத்துடன் இருந்த உனக்கு இம்மாதிரியாவது சந்தோஷமாய் ஏதாவது எழுதிக் கொண்டிருந்தால் அதனால் சீக்கிரம் குணமடைவாய் என்றுதான் கற்பனை செய்து எழுதிக் கொண்டிருந்தேன். நீ அதை நிஜமென்று நம்பி விடுவாய் என்று நான் கண்டேனா என்ன?" என்று சிரித்தான் ராஜு.

ரஸமான விஷயம்

ராஜு



"என்னருமை சேது!

உன் கடிதம் பார்க்க, மனது ரொம்ப வருத்தமாக இருக்கிறது. இப்படியும் ஒரு பத்து விளையாட்டா? நீ எழுதி யிருப்பதி லிருந்து உன் கால் சரியாகக் கூடிவரக் குறைந்தது இரண்டு மாதங்களாவது ஆகும் போலிருக்கிறதே? ஆஸ்பத்திரியில் பொழுதே போகவில்லை என்றும் பொழுது போக்குக்காக ஏதாவது ரஸமான விஷயங்கள் எழுதப்படியும் சொல்கிறாய். என் வீட்டுக்கு எதிரில் ஒரு பெரிய வீடு இருக்கிறது. அதில் ஒரு ரிடையர்ட் தாசில்தார் குடி வந்திருக்கிறார். அவர் தமது வீட்டை வெகு அழகாக வைத்துக் கொண்டிருக்கிறார். வீடு அலங்கரிக்கப்பட்டிருக்கும் அழகையும், மற்றைய அம்சங்களையும் பார்த்தால் அவ்வீட்டில் அவரைத் தவிர இன்னும் யாரோ இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அது யாராயிருக்கலாம்?

ராஜு."

○

"பிரிய ராஜு,

உன் கடிதம் என்ன கடிதம்? என்னவோ புதிர் போட்டு எழுதி யிருக்கிறாயே? அவருடன் இருப்பது யார் என்று உனக்குக் கண்டுபிடிக்கத் தெரியவில்லையா? இப்படி அரைகுறையாக எழுதி என் ஆவலை அதி



தும், "சரி, இன்றைக்கு அந்த இரண்டு வார்த்தைகளிலிருந்தும் நாம் தப்பினோம்" என்று எண்ணியபோது, அய்யாசாமி, "அவள் இருந்த காலத்தில் நான் எப்படியிருந்தேன் தெரியுமா?" என்று ஆரம்பித்தார்.

"அவள் இருந்தால் இந்த மாதிரித் தலையை வாரிக்கொள்ள மாட்டாளா? சுத்தமாக இருக்கமாட்டாளா? அழுக்கும் பரட்டையுமாகத்தான் இருப்பாள் போலிருக்கிறது. அப்படி இருந்தால்தான் இவருக்குப் பிடிக்குமோ என்னமோ!" என்று சின்னம்மாள் எண்ணினாள்.

ஒவ்வொன்றுக்கும் இதைப்போல் காலமான அவருடைய மனைவியின் பெயரை வைத்துக்கொண்டு அவளை அடிக்கடி எடைபோடுவது சின்னம்மாளுக்கு எல்லையற்ற துயரத்தை அளித்தது. அவளுக்கு அது பெரும் ஹிம்சையாகக் கூடப் பட்டது. அவளால் அதைப் பொறுக்க முடியவில்லை. அவருடைய முதல் மனைவி மகா கெட்டிக்காரியாக இருக்கலாம். ரொம்பக் குணசாலியாக இருக்கலாம். அதற்காகத் தன்னைக் குறைத்துப் பேசுவது என்பது அவளுக்கு நரக வேதனையாக இருந்தது.

அந்த முடிவையும் வைராக்கியத்தையும் பரிசோதனை செய்வதைப் போல் அன்றிரவு அய்யாசாமி ஒரு சிநேகிதரைச் சாப்பாட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். சின்னம்மாள் வழக்கத்தை விட அதி ஜாக்கிரதையாக நடந்து கொண்டாள்.


அவர்கள் சாப்பிடுவதற்காக இலையைப் போட்டுக் கறியை வைக்கும்போது அவளுடைய கணவன் முகம் அவளை எறிட்டுப் பார்க்கும் உணர்ச்சி உண்டாயிற்று. அது சந்தோஷத்தினாலா, அல்லது அவள்தான் ஏதாவது தப்பு செய்துவிட்டாளா? இந்தச் சந்தேகம் வந்ததும் சின்னம்மாளின் கைகள் சிறிது ஆடிவிட்டன. கையிலிருந்த கறி கீழே சிந்திவிட்டது.

"இப்படித்தான் கறியைக் கீழே சிந்துவார்களா? இரண்டு பேருக்கு இன்னும் சரியாகப் பரிமாறத் தெரியவில்லை!" என்று அய்யாசாமி ஐயர் சொல்லிக் கொண்டே வரும்போது, அவருக்கு முதல் மனைவியின் ஞாபகம் வந்துவிட்டது. "அவள் மட்டும் இப்போது இருந்தால் எப்படியிருக்கும்?" என்று ஆரம்பித்து விட்டார்.

உடனே சப்த சமுத்திரங்களின் அலைகளும் ஒன்றாகத் திரண்டு வந்து சின்னம்மாளின் மார்பிலே மோதின. சாப்பாடு முடியும் வரையில் அவள் எப்படி நடந்து கொண்டாள் என்பது அவளுக்கே தெரியாது. வந்தவரை அனுப்பிவிட்டு அவளுடைய கணவன் உள்ளே வந்ததும், அவ்வளவு நாட்களாக அடக்கி வைத்திருந்த துக்கமும் அழுகையும் ஒன்றாக அவளையும் மீறி எழுந்தன. "அவள் இருந்தால் அப்படி என்ன செய்து விடுவாள்? ஏன் எதற்கெடுத்தாலும் அப்படிச் சொல்லி என் பிராணனை வாங்குகிறீர்கள்?" என்று அய்யாசாமியைக் கேட்டாள் சின்னம்மாள்.

அவர் செய்த மகத்தான தவறுதலை அய்யாசாமியும் அப்போதுதான் உணர்ந்து கொண்டார். "அட அசடே! இவ்வளவு நாட்களும் உன்னை நான் குறைத்துப் பேசினேன் என்றா எண்ணிக்கொண்டிருக்கிறாய்? நீ செய்த சிறு தப்புகளைப் பார்க்கும்போது எனக்கு அவளுடைய ஞாபகம் வந்தது உண்மைதான். நீ சிறு தவறுகள் செய்த போதிலும் காரியத்தை ரொம்ப நன்றாகச் செய்து முடித்து விடுகிறாய். 'அவள் இருந்தால் அவ்வளவு கூட நடக்காதே!' என்று எண்ணி இதுவரையில் சந்தோஷமல்லவா பட்டுக் கொண்டிருக்கிறேன்?" என்று கூறினார்.

அப்பொழுது அவருடைய முகத்தில் தோன்றிய அன்பு வெள்ளத்தைக் கண்டதும், அவர் கூறியது உண்மைதான் என்று சின்னம்மாளுக்குப் புலப்பட்டது. தென்றலுக்குத் தலை வணங்கும் முல்லைக் கொடி போல் அவள் தலை குனிந்தாள்.



★

ரொம்பப் பழசு!

"இந்தக் கல்யாணத்துக்கு ரொம்ப நாளாக ஏற்பாடு நடந்திருக்கிற தென்று தெரிகிறது!"

"எதிலேயிருந்து தெரிகிறது?"

"இந்த எலுமிச்சங்காய் ஊறுகாயிலே யிருந்துதான்!"

★

வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்?" என்று தைரியப்படுத்திக் கொண்டாள்.

ஆகையால் கல்யாணத்துக்குப் பிறகு அய்யாசாமி ஐயரோடு வந்து குடித்தனம் செய்ய ஆரம்பித்தபோது, அவளுக்கு யாரிடமும் கோபமோ துவேஷமோ கிடையாது. அவள் எதிர்பார்த்ததைப்போல் அவளுடைய கணவன் உடல் தளர்ந்து மெலிந்து போன கிழவனாக இல்லாமல் இளமையின் பொலிவு மாறாதவராக இருந்ததைக் கண்ட சின்னம்மாளுக்குப் புத்துணர்வும் உற்சாகமும் உண்டாயின. அய்யாசாமி ஐயர் காட்டிய பரிவும் ஆதரவும் சின்னம்மாளைப் பிரமிக்க வைக்கக் கூடியதாக இருந்தன. "என்னமோ எண்ணினேனே! வேறு யாரையாவது கல்யாணம் செய்துகொண்டிருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?" என்றுகூட ஒவ்வொரு சமயம் அவள் நினைத்தாள்.

2

சின்னம்மாள் வந்த ஒரு வாரத்துக்குள் சில விசேஷங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் காலையில் ஐந்து மணிக்கே அவள் எழுந்து விடுவது வழக்கம். அப்பொழுதெல்லாம் வேலைக்காரர்கள் யாரையும் அமர்த்தவில்லை யாதலால், அதி காலையிலேயே வீட்டுக் காரியங்களையெல்லாம் செய்து விட்டு வெந்நீர் போட்டுக் கணவனுக்கு வேண்டியவைகளைத் தயார் செய்து வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், ஒரு நாள் அது தவறி விட்டது. அன்றிரவு படுத்துக் கொள்வதற்கே சிறிது நேரமாகி விட்டபடியால் அவள் எழுந்திருப்பதற்குக் கொஞ்சம் நாழியாகி விட்டது. அய்யாசாமி ஐயர் முதல் நாளே உடம்பு சரியாக இல்லையென்று சொல்லிக் கொண்டிருந்தார். அவள் எழுந்திருப்பதற்கு நாழியான தினத்தன்று, ஆற்றில் முழுகி விட்டு ஜலம் சொட்டச் சொட்ட வீடு வந்து சேர்ந்தார். சின்னம்மாளுக்குத் திகிலென்றது. "இதோ பாருங்கள், நான் தூங்கிக் கொண்டிருந்தால் என்ன? என்னை எழுப்பக் கூடாதா?" என்று கேட்டாள்.

அப்படிக் கேட்டு விட்டு ஐயர்வாளின் முகத்தை அவள் பார்த்தாள். அதில் காணப்பட்டது சந்தோஷமா, துக்கமா, கோபமா என்று ஒன்றும் தெரியவில்லை. "பெண்கள் காலை எட்டு மணி வரைக்குமா தூங்குவார்கள்?" என்றார் ஐயர். பிறகு முதல் மனைவியை நினைத்துக்கொண்டு "அவள் இருந்தால்—" என்று அவர் பெருமூச்செறிந்தார்.

அவள் இருந்தால்? — அவள் இருந்தால் என்ன? அவளுக்கும் ஒரு நாள் அசதிதான் உண்டாகும். அவளும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் காலை எட்டு மணி வரைக்கும்தான் தூங்குவாள். —இதை நினைத்தபோது சின்னம்மாளுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. இதைப் போன்ற சின்னஞ் சிறு விஷயங்களில் எல்லாம் அவளுடைய மனதைப் புண்படுத்தாமல் அவளைச் சீர்திருத்தி யிருக்கலாம். "நாளை முதல் காலையில் நாலு மணிக்கே எழுந்திருக்க வேண்டும், தெரியுமா?" என்று அவர் சொல்லி யிருந்தால் அவள் எவ்வளவு சந்தோஷத்துடன் கேட்டிருப்பாள்!

ஒரு நாள் சின்னம்மாள் வழக்கம்போல் நடுவில் வகிடு எடுத்து வாரிக் கொள்ளாமல் அன்று கோணல் வகிடு எடுத்துப் பின்னிக் கொண்டிருந்தாள். குங்குமப் பொட்டுக்குப் பதிலாக அவள் முகத்தில் சாந்து வாசனை வீசியது. காதுகளிலிருந்து ஜிமிக்கிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவள் அவற்றைச் சுற்றிக் காட்டிப் புன்னகையோடு, "இது எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? சோத்தாராம் கடையில் இப்போதுதான் இந்தத் தினுசு வந்திருக்கிறதாம். பவுன் மாற்றுக்கு உத்தரவாதம் தருகிறேன் என்கிறான்" என்று சொன்னாள்.

"ஆமாம்! அவன் உத்தரவாதத்தைக் கொண்டு போய் உடைப்பில்தான் போட வேண்டும்!" என்று அவர் பதில் சொல்லியது சின்னம்மாளுக்கு அவ்வளவு சுவாரஸ்யமாகப் படவில்லை. அத்துடன் அவர், "இதென்ன அலங்காரம் என்று செய்து கொண்டிருக்கிறாய்? குடும்ப ஸ்திரீயாய் லட்சணமாய் நடுவில் வகிடு எடுத்து குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாலே அலாதிக் களையாகத்தான் இருக்கிறது" என்றார். சின்னம்மாளுக்கு இந்த வார்த்தை சுரீர் என்று தைத்தது.

திடீரென்று அவளுக்கே அய்யாசாமியின் முதல் மனைவி ஞாபகம் வந்தது. அவள் எப்படி இருப்பாள் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவளுக்கு அடக்க முடியாத ஆவல் உண்டாயிற்று. அவர் முதல் மனைவியின் ஞாபகத்தில், "அவள் இருந்தால்?" என்று எங்கே ஆரம்பித்துவிடப் போகிறாரோ என்று அவள் நடுங்கினாள். ஒரு நிமிஷம் அவர் வாயை மூடிக்கொண்டிருந்த

சின்னம்மாளின் சினம்

பி. வி. சுப்பிரமணியன்

சின்னம்மாளின் கல்யாணத்தைப் பற்றி எல்லாரும் துக்கம் விசாரிக்க வந்தார்கள்! "ஏண்டி, சின்னம்மா! உனக்குக் கல்யாணமாமே! என்னமோ அம்மா, அவரவர்கள் தலை எழுத்து என்று ஒன்று இருக்கிறதோ, இல்லையோ?" என்று சொல்லிச் சின்னம்மாளின் ரொம்ப நெருங்கிய சிநேகிதிகள் அவரவர்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். சின்னம்மாளுக்கு இவற்றையெல்லாம் கேட்டபோது எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"ஆமாம், கல்யாணந்தான். அதற்காக இப்படி ஏன் என்னைத் துக்கம் விசாரிக்க வந்திருக்கிறவர்கள் மாதிரி விசாரிக்கிறீர்கள்? உலகத்தில் எத்தனையோ பேர் இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டுக் குடியும் குடித்தனமுமாக இருக்கிறார்கள். நான் மட்டும் என்ன அதிசயம்?" என்று சின்னம்மாள் அவர்கள் மேல் எரிந்து விழுந்தாள்.



ஆனால் அவள் மனதிலும் சிறிது நேரத்திற்கு முன்புதான் பெரிய புயலடித்து ஓய்ந்திருந்தது. "ஐயோ! நம்முடைய ஜன்மம் எப்படியாகி விட்டது, பார்த்தாயா" என்று எண்ணி அவள் ஏங்கினாள். அவளுடைய தகப்பனார் உயிரோடு இருந்தால் இப்படி எல்லாம் நடந்திருக்குமா? அவர் போய், அண்ணனுடைய ஆதிக்கம் வீட்டில் ஆரம்பமானதிலிருந்துதானே இப்படி எல்லாம் நடக்கின்றன?

அண்ணனுடைய ஞாபகம் வந்ததும் சில நாட்களுக்கு முன்பு அவனுக்கு வந்த கடிதமும் போட்டோவும் சின்னம்மாளின் நினைவுக்கு வந்தன. தனக்கு அப்படி ஒன்றும் வயது ஆகிவிடவில்லையென்றும், நாற்பத்தேழாவது வயதுதான் நடந்து கொண்டிருக்கிறதென்றும் எழுதி, சின்னம்மாளைத் தனக்கு விவாகம் செய்து கொடுக்க முடியுமா என்று அய்யாசாமி ஐயர் கேட்டிருந்தார். அந்தக் கடிதத்துடன் அவருடைய போட்டோவும் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சின்னம்மாள் மறுபடியும் பெட்டியிலிருந்து எடுத்துப் பார்த்தாள். அவருடைய முகத்தில் அப்படி வயதானவரின் களை ஒன்றும் தென்படவில்லை. "சரி, எப்படியோ பார்த்துக் கொள்ளலாம். நம்முடைய தலைவிதி இப்படித்தான் இருக்கிறதென்றால், அதற்காக

வைகறைத் துயிலெழேல்!

க.நா.

“இது என்ன விபரீத புத்திமதியாக இருக்கிறதே!” என்று நீங்கள் கேட்பீர்கள். ஆனால், இதோ அதற்குச் சமாதானம் சொல்ல நான் தயாராயிருக்கிறேன். பிறகு உங்கள் சந்தேகங்கள் ‘சூரியனைக் கண்ட பனிபோல’ விலகுவதைப் பார்ப்பீர்கள்.

மேலே சொன்ன பழமொழியையே எடுத்துக் கொள்ளுங்களேன். அந்தப் பழமொழிக்கு ‘சூரியன் உதித்தவுடன் பனியை விரட்டி விடுகிறான்’ என்பது தானே அர்த்தம்? பனி அவ்வளவு நல்ல வஸ்து அல்ல. அது நிமோனியா, இன்புளுயன்ஸா முதலிய ஜுரங்களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆகையால், உலகத்தில் எல்லோரும் சூரியோதயமாகி வெகு நேரம் கழித்து எழுந்திருக்கும் வழக்கத்தைக் கடைப் பிடித்தால், இன்னும் ஐந்து வருஷங்களில் மேற்சொன்ன வியாதிகளை இருந்த விடம் தெரியாமல் செய்து விடலாம் என்பது என் நம்பிக்கை.


மேலும், விடியற் காலையில் எழுந்திருப்பதற்கு மற்றொரு முக்கியமான ஆட்சேபம் இருக்கிறது. மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், தங்கள் கதையில் அந்த வேளையை வர்ணிப்பதாயிருந்தால், “எங்கும் ஒரே கும்மிருட்டு. விண்மீன்கள் வரப்போகும் அருணோதயத்துக்குப் பயந்தவைபோல் நடுங்கிக் கொண்டிருந்தன. பட்சி ஜாலங்கள் இன்னும் துயிலெழுந்து தங்கள் உதய ராகத்தைத் தொடங்கவில்லை. அதோ, ஒரு ஆந்தையின் அலறல்!” என்றுதான் வர்ணிக்க வேண்டும். இப்படிப்பட்ட அந்தகாரம் நிறைந்த வேளையில், நட்சத்திரங்கள் மங்கும் (அப்பொழுது நம் பிறந்த நட்சத்திரமே மங்கிக் கொண்டிருக்கலாம்) வேளையில், தினசரி வாழ்க்கையைத் தொடங்கும் தைரியம் நம்மில் யாருக்கு உண்டு?

விடியற்காலை நாம் காணும் கனவுகள் நிச்சயமாகப் பலிக்குமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் விடியற்காலை விழித்துக் கொள்வதின் மூலம் நம்முடைய கனவுகளின் உண்மையைத் தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை நாம் இழந்து விடுகிறோமல்லவா?

விடியற் காலையில் எழுந்திருக்கும் ஒருவன், இயற்கைக்கு விரோதமாக நடக்கிறான் என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், “ஆதியில் கடவுள் சூரியனை முதலில் சிருஷ்டித்தார்; பிறகுதான் மனிதனை உண்டாக்கினார்” என்பது கிறிஸ்தவ வேதத்தின் கொள்கை. மற்ற மதங்களும் இந்த உண்மையை ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க சூரிய நாராயணனுக்கு முன் முந்திரிக் கொட்டை போல் நாம் எழுந்திருப்பது மிகவும் அபசாரம்தான்.

சில பேர்களுக்கு விடியற்காலையானவுடன் தூக்கம் வராமல் போகலாம். அவர்கள் தூக்கம் வராவிட்டாலும் படுக்கையில், தூங்கும் பாவனையில் கண்ணை மூடிக் கொண்டு மௌனமாய்ப் படுத்திருப்பது அவசியம். அதைத் தூக்கத்துக்குச் சமமாகக் கடவுள் கணக்கிடுவார் என்று தெரிகிறது. “தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்?” என்று கூடப் பத்திரகிரியார் கூறியிருக்கிறார்.

உலகத்தின் எதிர்காலப் பிரஜைகளாகிய மாணவர்கள் வைகறைத் துயில் எழுவதன் கெடுதல்களை உணர்ந்திருப்பது பாராட்டத்தக்க விஷயம். கட்டுப் பெட்டிகள் யாராவது, ‘பஞ்ச பஞ்ச உஷக் காலத்தில்’ எழுந்து கொண்டிருக்கலாம். ஆனால், வருங்காலத்தில் தேசத்தின் முன்னணியில் இருக்கப் போகும் இளைஞர்கள் நீண்ட நேரம் துயில்வதின் அருமை பெருமைகளை அறிந்திருப்பது ஆறுதலான விஷயம். ஆகையால், நேயர்களே! எழுமின், விழிமின், இரவிளெழுந்தபின்பே விழிமின் எழுமின்!”



“பிச்சை கேட்க ஆபீஸ்தானா இடம்? உன்னை யார் இங்கே வரச்சொன்னது?”

“வீட்டிலேதானுங்க. எந்த வீட்டிலே போய்க் கேட்டாலும் ‘ஐயா ஆபீசுக்குப் போயிட்டாங்க’ என்று சொன்னாங்க; அதனாலேதான் இங்கே வந்தேன்!”

என்ற சப்தம் வந்தாலே அது பிளாக் மார்க்கட் என்று நிச்சயம் பண்ணி விடலாம்.

பிளாக் மார்க்கட் என்றால் விலை தானே ஏகத் தாராகக் கேட்கிறார்கள், சாமான் நிச்சயமாகக் கிடைக்கும் என்று நினைத்தீர்களோ, ஏமாந்துதான் போவீர்கள். பிளாக் மார்க்கட்டில் சாமான் வாங்குவதற்குக் கையில் பணம் மாத்திரம் இருந்தால் போதாது.

சில பெரிய சங்கங்களில் ஒரு வழக்கம் உண்டு. யாராவது சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவேண்டும் என்றால் இன்னொரு அங்கத்தினர் அவர்களை அறிமுகம் செய்துவைக்க வேண்டும். அதைப் போலவே பிளாக் மார்க்கட்டிலும், அந்த மார்க்கட்டில் முன் கூட்டியே அனுபவம் உள்ள யாராவது அறிமுகம் செய்துவைத்தால்தான் சாமான்கள் வாங்க முடியும்.

பிளாக் மார்க்கட்டில் சாமான்கள் விற்பதைத் தடுப்பதற்காகச் சர்க்கார் என்னென்னமோ நூற்றெட்டு சட்டம் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு சாமான் என்னென்ன விலை விற்கிறது என்று விலை ஜாபிதா ஒன்று எல்லாருக்கும் தெரியும்படியாக எழுதி வைக்கவேண்டும் என்று உத்தர விட்டிருக்கிறார்கள்.

அதன்படியே எத்தனையோ கடைகளில் விலை ஜாபிதா தொங்குவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஜாபிதாவில் கண்டுள்ள சாமான்களைத்தான் காணோம். எத்தனைக்கெத்தனை ஜாபிதா எல்லாரும் பார்க்கும்படியான இடத்தில் இருக்கிறதோ, அத்தனைக்கத்தனை கடையில், சாமான்கள் இருக்காது. கேட்டால், "எல்லாம் ஆகிவிட்டதே, ஸார்" என்பார்.

என்ன பணம் ஆனாலும் சரி, சாமான் முக்கியமாக வேண்டும் என்று இருக்கிறவர்கள் இந்தப் பதிலைக் கேட்டு உடனே, வெளியே போய்விட மாட்டார்கள். ஏனெனில் வேறு எந்தக் கடைக்குப் போனாலும் இதே பதில்தான் கிடைக்கும்.

ஆகவே, அங்கேயே நின்று விடுவார்கள். பக்கத்தில் இருக்கும் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தும் விடுவார்கள்.

இதிலிருந்து கடைக்காரர், "சரி, பிளாக் மார்க்கட் விலை கொடுக்க ஆசாமி தயாராய்த்தான் இருக்கிறார்" என்று தெரிந்து கொள்வார். ஆனால் கடைக்காரருக்கு இன்னொரு சந்தேகம்! ஆசாமி நிஜமாகவே சாமானைத் தேடி வந்தவர்தானா, இல்லை தம் கடை பிளாக் மார்க்கெட் கடையா என்று கண்டு பிடித்துப் போலீசாருக்குப் பிடித்துக் கொடுப்பதற்காக வந்தவரா என்று தெரியவேண்டும் அல்லவா?

அதற்காக லேசில் சாமான் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள மாட்டார். நம்மிடம் அரை மணி நேரம் பேச்சுக் கொடுத்து, நம் குலம், கோத்திரம், உத்தியோகம், சம்பளம் முதலிய பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு, நம்மை நம்பலாமா, வேண்டாமா என்ற முடிவுக்கு வருவார்.

கடைசியில் நம்பலாம் என்ற முடிவுக்கு வந்தாலும், "சாமான் இருக்கிறது" என்று உடனே கொடுத்துவிடுவார் என்று நினைக்கிறீர்களா? மாட்டார். "சாமான் என்னிடம் இல்லை. பிளாக் மார்க்கட்டிலிருந்து வேண்டுமானால் வரவழைத்துத் தருகிறேன்" என்பார்.

"சரி, வாருங்கள் பிளாக் மார்க்கட்டுக்குப் போவோம்" என்று நீங்கள் எழுந்தால், "சரியாய்ப் போச்சு! உங்களைப் பார்த்தாலே இல்லை என்று சொல்லி விடுவான். நான் நம்ப பையனை அனுப்பி வரவழைக்கிறேன்" என்று பையனை அனுப்புவார். பையன் அந்தக் கடையின் பின்புறத்திலேயே ஒரு கால் மணி நேரம் உட்கார்ந்து விட்டுக் கடைசியில் அங்கிருந்தே சாமானை எடுத்துக் கொண்டு வருவான்.

பிளாக் மார்க்கெட்டில் சாமான்கள் வாங்குவதில் இத்தனை தொல்லைகள் இருக்கின்றன.

இது தெரியாமல் சரக இந்த சமயம் பார்த்து ஒரு பெண்ணைப் பெற்று வைத்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணும், பிறந்ததிலிருந்து 'குளுகோஸ் டீ'யைக் கொண்டா, 'க்ரைப் வாட்டர்'ரைக் கொண்டா என்று எந்த சாமான்கள் கிடைக்காதோ, அந்த சாமான்களாகப் பார்த்துக் "கொண்டா" என்று சண்டித்தனம் பிடிக்கிறது. நானும் குழந்தை பிறந்ததிலிருந்து 'குளுகோஸ் டீ' இருக்கிறதா, 'க்ரைப் வாட்டர்' இருக்கிறதா என்று ஒவ்வொரு கடையாக நுழைந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இப்படி நானும், என்னைப்போல் இன்னும் எத்தனையோ பேரும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படி அவஸ்தைப் படும்போது "யுத்தம் எப்பொழுது முடியும்?" என்று கேட்கத் தோன்றுமா, தோன்றாதா, நீங்களே சொல்லுங்கள்!



என்று ஒன்று தனியாக ஏற்பட வேண்டுமா என்று கேட்கிறார்கள். பிளாக் மார்க்கட் என்றால் ஏதோ தனியாகப் போர்டு மாட்டியிருப்பதுபோல் இவர்கள் நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள்.

ஏன், நான்கூட முதலில் அப்படித் தான் நினைத்துக் கொண்டிருந்தேன். என் புஸ்தகம் ஒன்று அச்சிடுவதற்காக காகிதத்துக்காகத் திண்டாடிக் கொண்டிருந்தேன். யார் யாரையோ கேட்டுப் பார்த்தேன். பிரயோஜனமில்லை.

கடையில் ஒருவர் சொன்னார் "ஏன் ஸார், பிளாக் மார்க்கட்டில் கேட்டுப் பார்ப்பதுதானே?" என்றார்.

"பிளாக் மார்க்கட்டா? அது எங்கிருக்கிறது. தெரியாதே" என்றேன்.

"சரியாப் போச்சு! இது தெரிந்து கொள்ளாமலா புஸ்தகம் அச்சிட ஆரம்பித்தீர்கள்? நான் காட்டுகிறேன்" என்று என்னை அழைத்துக்கொண்டு போனார்.

என்ன ஆச்சரியம்! நான் முதல் நாள் தான் "காகிதம் இருக்கா?" என்று ஒரு தடவைக்கு நான்கு தடவையாகக் கேட்டு, அவர்கள் நான்கு தடவைக்கு நாற்பது தடவையாக "இல்லை" யென்று சொன்ன அதே கடைக்குத் தான் அழைத்துக்கொண்டு போனார்.

பிளாக் மார்க்கட் என்று யாரும் தனிக் கடை வைத்துக் கொண்டிருக்கவில்லை. சாதாரணக்கடை என்று நாம் நினைத்துக் கொள்ளும் கடைதான் நடுவில், நடுவில் ஆள், சந்தர்ப்பம், சமயம் இவற்றைப் பார்த்துக்கொண்டு பிளாக் மார்க்கட் கடையாக மாறுகிறது.

நான் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்த காலையில் ஷேக்ஸ்பியர் நாடகம் நடித்துக் காண்பிப்பதற்காகச் சில நடிகர்கள் எங்கள் காலேஜுக்கு வருவதுண்டு. அதில் சில நடிகர்கள் இரண்டு பேர் பேசும் பாகத்தைத் தாங்கள் ஒருவரே பேசிக் காண்பிப்பார்கள்.

வெனிஸ் வர்த்தகனும், அவனுக்குக் கடன் கொடுத்த ஷைலாக் என்னும் யூதனும் பேசும் கட்டத்தை நடித்துக் காண்பிக்க வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நடிகர் மேடையில் இந்த மூலையிலிருந்து அந்த மூலைக்கும், அந்த மூலையிலிருந்து இந்த மூலைக்கும் மாறிக்கொண்டேயிருப்பார். இந்த மூலையிலிருந்து பேசும் போது வெனிஸ் வர்த்தகன் பேசுகிறான் என்று அர்த்தம். அந்த மூலையிலிருந்து பேசும்போது ஷைலாக் பேசுவதாக அர்த்தம்.

இதைப் போலத்தான் பிளாக் மார்க்கட்டும். ஒன்றுக்கு மூன்றாக லாபம் கிடைத்தால் போதும் என்றால் சாதாரணக் கடையாக இருக்கும். ஒன்றுக்கு மூன்று போதாது, முப்பது வேண்டும் என்றால் அது பிளாக் மார்க்கட் கடையாக மாறிவிடும். சாதாரணமாக நம்மைப் போன்ற ஆசாமிகள் போய்க் கேட்டால் பிளாக் மார்க்கட் கடையாக இருக்கும். ஆனால் யாராவது போலீஸ் அதிகாரிகள் போய்க் கேட்டால் அது சடாரென்று சாதாரண மார்க்கட் கடையாக மாறிவிடும்.

நாம் உள்ளே நுழைந்ததும், நுழையாததுமாக, "எங்கப்பா குதிருக்குள் இல்லை" என்பதுபோல் "இல்லை"

யுத்தம் எப்பொழுது முடியும்!

நாடோடி

பிளாக் மார்க்கட்



"நானும் கொஞ்ச காலமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். என்னைக் கட்டோடு மறந்து விட்டீர்களே! என்னைப் பற்றி ஒரு கட்டுரையிலாவது ஒரு வார்த்தை எழுதுவீர்களோ என்று பார்த்தால் ஒன்றிலும் காணோமே" என்று நேற்று அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டார்.

உண்மையில், நான் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரை மறக்கவே முடியாதபடி செய்து விட்டது இந்த யுத்தம். சுயராஜ்யத்தை எடுத்துக் கொண்டு வராத இந்த யுத்தம், அதற்குப் பதில் பிளாக் மார்க்கட்டை (கள்ள மார்க்கட்டை) எடுத்துக்கொண்டு வந்தாலும் வந்தது, நான் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரை மறக்கவே முடியாதபடி ஆகிவிட்டது.

நான் அண்ணுசாமி அய்யரைப் பார்த்துப் பழித்ததுபோய், இப்பொழுது அவர் என்னைப் பார்த்துப் பழிக்கும்படியான நிலைமை வந்து விட்டது! அது போதாது என்று அவருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு அவர் மனைவியும், அது போதாதென்று சுரகவும் சேர்ந்து பழிக்கும்படியான நிலைமை வந்து விட்டது!

முன்பெல்லாம் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரைக் கண்டால் எனக்கு ஒரு விதத்தில் எளக்காரம். கடையில் போய் ஏதாவது சாமான் வாங்கிக்கொண்டு வா என்றால் நான் என்ன பண்ணுவேன்?

"காசிக்குப் போனேன், காவடி கொணர்ந்தேன்" என்பதுபோல் ஏதோ ஒரு கடைக்குள் நுழைவேன். எனக்கு வேண்டிய சாமானைக் கேட்பேன். அவன் கேட்ட பணத்தைக் கொடுப்பேன். சாமானைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவேன். (வீட்டுக்குத் திரும்புவதுடன் நிறுத்திக் கொள்கிறேன். நான் சாமான் வாங்கிக் கொண்டு வரும் லட்சணத்தைப் பற்றி சுரக சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்வதை உங்களிடம் சொல்லி என் மானத்தை நானே போக்கிக்கொள்ள விரும்பவில்லை.)

ஆனால் அண்ணுசாமி அய்யர் அப்படியில்லை. ஒரு சின்ன சாமான் வாங்குவதற்கு ஊரில் இருக்கிற எல்லாக் கடைகளுக்கும் ஒவ்வொரு கடையாக நுழைந்து புறப்படுவார். ஒரு கடைக்குப் பத்துக் கடையாக விசாரித்தால்தான் அவருக்குச் சாமான் வாங்கினதுபோல் இருக்கும். திருப்தி ஏற்படும்.

யுத்தம் வருவதற்கு முன்பு, இதைக் குறித்து நான் அண்ணுசாமி அய்யரைப் பழித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ, ஒவ்வொரு சாமானுக்கும் அண்ணுசாமி அய்யர் பத்துக் கடை நுழைந்தால் நான் நூறு கடை நுழைகிறேன். அவர் ஒவ்வொரு கடையிலும் கால்மணி தங்கினால் நான் முக்கால் மணி தங்குகிறேன். அவருக்கோ ஒரு கடைக்குப் பத்துக் கடையாக நுழைந்தால் திருப்தி ஏற்பட்டது. எனக்கோ நூறு கடை நுழைந்தும் திருப்தி ஏற்படுகிறதில்லை. காரணம், சாமான்கள் எல்லாம் பிளாக் மார்க்கட்டுக்குப் போய்விட்டதுதான்.

விஷயம் தெரியாதவர்கள் சிலர் சாமான்கள் விற்பதற்குச் சாதாரண மார்க்கட் என்று ஒன்று இருக்கிறதே, அது போதாதா, பிளாக் மார்க்கட்

அது ஒரு காலம்!



சாய்ந்து வருவங்களுக்குருன், தான். நீங்கள் எந்த விடத்துக்கும் சுலபமாகவும் அதிகச் செலவில்லாமலும் போகமுடியும். இப்போது பிரயாணச் செலவு ஒன்றுக்கு நாலாகிவிட்டது. தாமதமின்றி டிக்கட்பெறும் காலமும் ஒன்று இருந்தது. இப்போதோ அரைமணி நேரத்துக்கு மேலாக முன்நின்று டிக்கட்டு பெறவேண்டியிருக்கிறது; சார்ஜும் அதிகமாகி விட்டது. ஒரு அணாவுக்கோ அரை அணாவுக்கோ உங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய கூலிகள் தயாராக நின்றிருந்த காலமும் இருந்தது. இப்போது அவர்களைப்பெறுவதே கஷ்டம். உங்களிஷ்டப்படியே வண்டியும், வண்டியில் உட்காரும் இடமும் சுலபமாகப்பெறும் காலமும் இருந்தது. இன்று வண்டியில் நுழைய முடிந்தாலே அதிர்ஷ்டம்தான். பல தடவைகளில் ஏறிப்பயிருக்க முடியாமலே போய்விடுகிறது. உள் நுழைய முடிந்தாலும், பல மணி நேரம் நிற்கவேண்டியும் நேரிடுகிறது. இந்த கலாட்டாவில் உங்கள் சாமான்களை இழக்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன், உங்கள் குடும்பத்தாரிடமிருந்தே பிரிந்து விடும்படி நேரிட்டாலும் நேரிடலாம். உங்கள் பெண்டிர், மக்களுக்கு பிரயாணம் இன்று முன்போல சௌகரியமானதல்ல.

புத்தி சாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். சௌகரியமான காலம் வரும்வரை நீங்களும் உங்கள் குடும்பமும் ரயில்வேபோக்குவரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.


பிரயாணத்தைக் குறையுங்கள்

A 278.T.M

காலக்ஷேபம்

சரியான பதில்!

வெளியூர்ப் பந்தாட்ட கோஷ்டியார்:- என்ன ஸார், விளையாடும் இடம் வெறும் கட்டாந்தரையாக இருக்கே! புல்லையே காணோமே!



உள்ளூர் கோஷ்டியார்:— ஏன் ஸார், நீங்கள் இங்கே வந்திருக்கிறது பந்தாடவா, புல் மேயவா?

—லக்ஷ்மி சுப்ரமண்யம்.

●

போலீஸ் வேலை!

வீட்டுக்காரர்:— திருட்டுப் போன மோதிரம் வீட்டிலேயேதான் இருந்தது. இப்போதுதான் அகப்பட்டது.



போலீஸ் இன்ஸ்பெக்டர்:— என்ன ஐயா, இது! அதை இவ்வளவு நாள் கழித்துச் சொன்னால் என்ன அர்த்தம்? நாங்கள் திருடனைப் பிடித்தாகி விட்டதே!

—ஆர். சுப்பிரமணியன்.

●

புரியவில்லை

ஒருவர் (டாக்டரிடம்):— ஸார்! கையை மேலே உயர்த்தி, வயிற்றையும் மார்பையும் முன்னால் தள்ளிக் கைகளை மடக்கி மறுபடியும் கையை மேலே உயர்த்தினால் முதுகில் பளிச்சென்று ஒரு வலி உண்டாகிறது. இதற்கு என்ன மருந்து?



டாக்டர் (ஒன்றும் புரியாதவராகி):— நீங்கள் ஏன் அதுமாதிரி எல்லாம் செய்ய வேண்டும்?

அவர்:— பின் எப்படி பனியனைக் கழற்றுகிறது? —ஆர். எஸ். காந்தன்.

●

மனச்சாட்சி

மானேஜர்:— என்ன ஐயா, காலையிலும் 'லேட்'டாய் ஆபீசுக்கு வந்தீர்கள். இப்பொழுது சாயங்காலமும் சீக்கிரம் நேரத்திற்கு முந்தியே கிளம்பி விட்டீர்களே?



குமாஸ்தா:— ஆமாம், ஸார், இரண்டு வேளையும் 'லேட்'டாய் இருக்க எனக்கு இஷ்டமில்லை! —ஏ. சேதுராமன்.

●

பிற்காலத்தில்!

பையன்:— ராமு அடிக்கிறான் ஸார்.

உபாத்தியாயர்:— டே ராமு, விடுடா அவனை. இப்பவே இப்படி இருக்கிறாயே? பிற்காலத்திலே எப்படி இருக்கப் போகிறாயோ?



ராமு:— பிற்காலத்தில் உங்களமாதிரி ஒரு உபாத்தியாயராக இருக்கப்போகிறேன், ஸார். —கோபாலன்.

●

யோக்கியதாம்சம்!

காவற்காரன் வேலைக்கு ஒருவன் மனுச் செய்து கொண்டான்.

அதிகாரி:— நீ காவற்காரனாக இருக்க உன்னிடம் என்ன யோக்கியதாம்சம் இருக்கின்றது? உன்னால் ஒரு திருடனை எதிர்த்து அவனிடமிருந்து உன்னைக் காத்துக்கொள்ளமுடியுமா?



வேலைக்கு வந்தவன்:— பேஷாய் முடியுங்க; இதோ பாருங்கள், நான் அநேக ஓட்டப் பந்தயங்களில் பரிசுகள் பெற்றிருக்கிறேன். —கே. எம். கணபதி.


இயற்கையாக எழுதியிருக்கிறாய்? இவ்வளவு அழகாகப் படம் போட்டுவிட்டு வேடிக்கை பண்ணுகிறாயா என்ன? எப்பொழுதுமே உனக்குக் குறும்புதான்" என்று சொல்லிவிட்டு, அவன் அம்மாவை அழைத்து வந்து காண்பித்தார்.


பிறகு, அம்மா வந்து படத்தைப் பார்த்துவிட்டு, "ரொம்ப அழகாயிருக்கிறதே! தத்ரூபம் பூஞ்செடியைப் பார்ப்பது போலவே யிருக்கிறது. என் கண்ணே! நீதானா இதைப் போட்டாய்!" என்று குழந்தை நெற்றியைத் தொட்டு திருஷ்டி முறித்தாள். அவன் தங்கை பானுவும் தம்பி சந்துருவும் அதைப் பார்த்துவிட்டு ஆனந்தப்பட்டார்கள்.

"நான் போடவில்லை!" என்று மணி எவ்வளவோ சொல்லியும் யாரும் அதை நம்பவில்லை.

அப்பாவின் யோசனைப்படி, மணி மறுநாள் அந்தப் படத்தைச் சித்திரப் போட்டிக்கு எடுத்துச் சென்றான். மணியின் பூந்தொட்டிப் படம்தான் சிறந்த படம் என்று எல்லோரும் தீர்மானித்தார்கள். அதற்காக வெள்ளிக் கோப்பையும் மணிக்குப் பரிசாகக் கிடைத்தது.

அணிலின் உதவியால்தான் தனக்குப் பரிசு கிடைத்தது என்பதை உணர்ந்த மணி அணிலுக்காக அத்திப் பழங்களை ஜன்னலருகில் போட்டுவைத்தான். தத்தித் தத்தி அணில் அவற்றைத் தின்ன வந்தது. மணி அதன் அருகில் வந்தபோது, அது பயந்து கொண்டு ஓடிப் போகவில்லை. மணி அதைத் தடவிக் கொடுத்து, "ஒன்றும் தெரியாத எனக்கு வெள்ளிக் கோப்பை கிடைத்தபோது, இவ்வளவு கெட்டிக்காரனான உனக்கு அத்திப் பழம் ஒரு பரிசா?" என்று மெதுவாகச் சொன்னான். அவனுக்குப் பதில் சொல்வது போல் அணிலும் 'கிரீச்' 'கிரீச்' என்று கத்திற்று.







மணியும் அணிலும்

பாக்ய சங்கர்

மணி ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டு டிராயிங் நோட்டில் சித்திரம் வரைந்து கொண்டிருந்தான். மறுநாள் அவன் பள்ளிக்கூடத்தில் சித்திரப் போட்டி. சித்திரப் போட்டியில் முதல் பரிசு பெறுபவர்களுக்கு வெள்ளிக் கோப்பை கொடுப்பதாகத் தெரியப் படுத்தியிருந்தார்கள். எப்படியாவது அந்தப் பரிசை அடைய வேண்டுமென்பது மணியின் ஆசை.

அவனும் என்னென்னவோ படம் போட்டுப் பார்த்தான். பூனை, எலி, கோபுரம், பாலம், முதலிய எவ்வளவோ படங்கள் போட்டான். ஒன்றும் அவனுக்குத் திருப்தியாயில்லை. கடைசியில் ஒரு பூந்தொட்டி போட்டுப் பார்த்து விடுவதென்று தீர்மானித்தான். முதலில் தொட்டியைப் போட ஆரம்பித்தான். தொட்டியைப் போட்டுக் கொண்டிருக்கும் போது, "மணி! மணி!" என்று அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். மணி அப்படியே புஸ்தகத்தைப் பிரித்துப் போட்டு விட்டு உள்ளே ஓடினான்.


சாப்பிட்டு விட்டு மணி திரும்பி வந்தபோது, ஓர் அணில் மணியின் டிராயிங் புஸ்தகத்தின்மேல் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அதன் வாலெல்லாம் சிவப்பு வர்ணம் அப்பிக் கிடந்தது! வர்ணப் பெட்டியிலிருந்த சிவப்புக் கட்டியை அணில் முன் காலால் பெயர்த்துப் பார்த்தது. குழைத்து வைத்திருந்த வர்ணம் கீழே கொட்டிக் கிடந்தது.


அதைப் பார்த்து மணி திடுக்கிட்டுப் போய் நின்றுவிட்டான். அதன் வாலில் தோய்ந்திருந்த வர்ணமெல்லாம் மணியின் டிராயிங் நோட்டில் பட்டது. "ஹை!" என்று கத்திக்கொண்டே மணி அணிலை விரட்டினான். அணில் பாய்ந்து ஓடிவிட்டது.

"படம் பாழாகிவிட்டதே" என்று கத்திக்கொண்டே நோட் புஸ்தகத்தைப் பார்த்தான். அவன் போட்டிருந்த தொட்டிப் படத்திற்கு மேல் அணில் தன்னுடைய வாலால் வர்ணத்தைத் தீட்டி வைத்திருந்தது. மணிக்கு அதைப் பார்த்ததும் அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "அப்பா! அப்பா! இங்கே வந்து பார்! அணில் படத்தைக் குட்டிச் சுவராக்கி விட்டது!" என்று கத்தினான்.

அப்பா ஓடி வந்து பார்த்தார். "அணில் எங்கேடா வர்ணத்தைப் பூசியிருக்கிறது? பூஞ்செடிப் படம் ரொம்ப அழகாயிருக்கிறதே!" என்றார். "இதோ பார் அப்பா! தொட்டிக்கு மேலே இதோ கிறுக்கியிருக்கிறதே!" என்றான் மணி அழுது கொண்டே.

"கிறுக்கியிருக்கிறதா? ஆஹா! பூவும் செடியுமாக எவ்வளவு அழகாக






Rao's
KOONTHAL VIRTHINI
REGD.
FOR ABUNDANT GROWTH OF BLACK HAIR
C. RAOSAHIB & CO., MADRAS.

எங்கே வரப்போகிறாய்? இரத்தத்தைக் கண்டதும் பயந்து விட்டாய் போலிருக்கிறது. விராட ராஜாவின் மகன் உத்தரகுமாரன் கதை உனக்குத் தெரியுமா? அரண்மனையில் ஸ்திரீகளுக்கு நடுவில் 'யுத்த களத்துக்குப் போனால் நான் அப்படிச் செய்வேன்; இப்படிச் செய்வேன்' என்று பெருமையடித்துக் கொண்டிருந்தான். ஆனால் போர்க்களம் சென்று எதிரி சைன்யத்தைப் பார்த்ததும் தேரிலிருந்து குதித்து ஓட்டமாய் ஓடத் தொடங்கினான். நான் உன்னை அர்ச்சுனனோடு ஒப்பிட்டது தப்பு. நீ உத்தரகுமாரன்!" என்று சொல்லி விட்டு வஜ்ரபாகு குதிரையைத் திருப்பிக் கொண்டு மலைப் பாதையில் மேலே போகத் தொடங்கினான்.

பரஞ்சோதி துள்ளி எழுந்து வேலையும் வாளையும் எடுத்துக் கொண்டு தன் குதிரையின் மீது தாவி ஏறினான். விரைவில் வஜ்ரபாஹுவின் அருகில் போய்ச் சேர்ந்தான்.

வஜ்ரபாஹு திரும்பிப் பார்த்து, "தம்பி! வந்து விட்டாயா? உன்னைப் பார்த்தால், என்னோடு சண்டை செய்ய வந்தவன் மாதிரி தோன்றுகிறது; அப்படித்தானா?" என்றான்.

"பயப்படாதீர்கள். அப்படி நான் உங்களோடு சண்டை செய்ய வந்திருந்தாலும் பின்னாலிருந்து குத்திவிட மாட்டேன்! முன்னால் வந்துதான் சண்டையிடுவேன்!" என்றான்.

"ஓஹோ!" என்றான் வஜ்ரபாகு.

"ஆமாம்; நான் இரத்தத்தைக் கண்டு பயப்பட்டு விடவில்லை. நான் உத்தர குமாரனுமல்ல. ஆனால் போர்க்களத்திலிருந்து ஓடும் எதிரியின் முதுகில் வேலை எறிந்து கொல்லும் தைரியம் எனக்குக் கிடையாது."

வஜ்ரபாகு சற்று மௌனமாயிருந்து விட்டு, "ஓடித் தப்பிக்க முயன்றவனை நான் வேல் எறிந்து கொன்றிரா விட்டால் என்ன ஆகியிருக்கும், தெரியுமா?" என்றான்.

"என்ன ஆகியிருக்கும்?"

"நாம் பார்த்த வாதாபி சைன்யம் இன்றிருந்து ஒரு மாதத்திற்குள்ளாகக் காஞ்சி நகரின் வாசலுக்கு வந்து சேரும்."

"அதனால் என்ன?"

"அதனால் என்னவா? வைஜயந்தி பட்டணத்துக்கு வாதாபி சைன்யம் வந்ததினால் அந்தப் பட்டணத்துக்கு நேர்ந்த கதி தெரியுமா?"

"வைஜயந்திக்கு நேர்ந்த கதி காஞ்சிக்கு நேருமா, என்ன? பல்லவ சைன்யம் எங்கே போயிற்று? மகேந்திர சக்கரவர்த்தி எங்கே போனார்?"

"அதுதான் மர்மமாயிருக்கிறது, தம்பி! காஞ்சியிலிருந்து கிளம்பிய மகேந்திர பல்லவர் எங்கே போனார் என்பதுதான் தெரியவில்லை. அவர் இன்னும் பல்லவ சைன்யத்தின் பாசறைக்கு வந்து சேரவில்லையாம்" என்றான் வஜ்ரபாகு.

பரஞ்சோதி சற்றுச் சும்மா இருந்து விட்டு, "ஐயா! அப்புறம் அர்ச்சுனன் என்ன செய்தான்? யுத்தம் எப்படி நடந்தது, சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

[சிவகாமியின் சபதம் முதல் பாகம் அடுத்த இதழில் முடிகிறது.]



படியும் வனத்துக்கே போகிறோம். என்னால் யுத்தம் செய்ய முடியாது!' என்று சோகித்து விழுந்தான். உன்னை இப்போது பார்த்தால் சாக்ஷாத் அந்த அர்ச்சுனனைப் போலவே இருக்கிறது.''

அர்ச்சுனன் என்ற பெயர் காதில் விழுந்த வுடனேயே பரஞ்சோதி வஜ்ர பாகுவை நோக்கலானான். அவனுடைய கண்களில் சோர்வு நீங்கி ஒரு புதிய ஒளி சுடர் விட்டது.

வஜ்ரபாகு பேச்சை நிறுத்தியதும், "அப்புறம் என்ன நடந்தது?'' என்று அவன் கேட்டான்.

"நல்ல வேளையாக அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண பகவான் ரத சாரதியாக அமைந்திருந்தார். அவர் அர்ச்சுனனைப் பார்த்து, 'அசடே! எழுந்திரு! நீ ஆண் பிள்ளை; க்ஷத்திரியன். யுத்தம் செய்வது உன் தர்மம். அதுதான் உன் சுபாவத்துக்கு ஒத்தது. கையிலே வில்லை எடு!' என்றார். இந்த மாதிரி இன்னும் எவ்வளவோ உபதேசம் செய்தார். அதனால் அர்ச்சுனனுக்கு மறுபடியும் ஊக்கம் பிறந்தது......'' என்று வஜ்ரபாகு நிறுத்தினான்.

"பிறகு?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

"பிறகு என்ன? அர்ச்சுனன் காண்டீபத்தைக் கையில் எடுத்து நாணேற்றி டங்காரம் செய்தான். கிருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்கிற சங்கை எடுத்து பும் பும் என்று ஊதினார். உடனே பாண்டவ சைன்யத்தைச் சேர்ந்த வீரர்கள் அவ்வளவு பேரும் தங்கள் தங்கள் சங்கங்களை வாயில் வைத்துப் பேரொலி கிளப்பினார்கள். யுத்த பேரிகைகள் அதம், அதம் என்று முழங்கின. பல்லாயிரம் வீரர்கள் ஏககாலத்தில் வில்லை நாணேற்றிய வண்ணம் ஹூங்காரம் செய்தார்கள். எக்காளங்கள்



முதலிய இந்த கோஷமெல்லாம் சேர்ந்து கௌரவ சைன்யத்தைச் சேர்ந்த வீரர்களின் நெஞ்சில் பீதியை உண்டாக்கின. உடனே மகா பாரத யுத்தம் ஆரம்பமாயிற்று.''

"யுத்தம் எப்படி நடந்தது?'' என்று பரஞ்சோதி கேட்டான்.


"அழகுதான்; இங்கே நான் உட்கார்ந்து உனக்கு பாரத யுத்தக் கதை சொல்லிக் கொண்டிருந்தால், இப்போது நடக்க வேண்டிய யுத்தம் என்ன ஆகிறது? என்னுடன் வந்தாயானால் சொல்கிறேன். ஆனால் நீ

சோகமும் உன்னைப் பிடித்ததின் காரணம் என்ன?" என்று கேட்டான்.

பரஞ்சோதி மறுமொழி சொல்லவும் இல்லை; தலை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை. வஜ்ரபாகுவின் முகத்தையே பார்க்க விரும்பாதவன்போல் கிழக்கே மலைக்கு மேலே சூரியன் தகதகவென்று ஒளி வீசிச் சுழன்று கொண்டிருந்த திசையை நோக்கினான்.

வஜ்ரபாஹு குதிரையை இன்னும் கொஞ்சம் பரஞ்சோதியின் அருகில் செலுத்தினான்.

"தம்பி! உன்னை இந்த நிலையில் பார்த்தால் எனக்கு யாருடைய ஞாபகம் வருகிறது தெரியுமா? குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இரு தரப்பு சைனியங்களும் வந்து யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்றன. யுத்தம் ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் அர்ச்சுனன் வில்லைத் தேர்த் தட்டில் போட்டுவிட்டு, 'எனக்கு ராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். இவ்வளவு பேரைக் கொன்று இராஜ்யம் ஆளுவதில் என்ன பயன்? நாங்கள் மறு



அத்தியாயம் 45

மலைக் கணவாய்

சூரியன் உதயமாகி இரண்டு நாழிகைப் பொழுது ஆன போது, அந்த மலைக் கணவாய்ப் பிரதேசம் மிகவும் கோரமான ரண களக் காட்சியை யளித்தது.

இளம் கதிரவனின் செங்கிரணங்கள் பாறையில் ஆங்காங்கு தோய்ந்திருந்த கரும் இரத்தத்தில் படிந்து அந்த ரணகளத்தின் கோரத்தை மிகுதிப் படுத்திக் காட்டின.

கால் கை வெட்டுண்டும், தலை பிளந்தும், தேகத்தில் பல இடங்களில் படுகாயம் பட்டும் உயிரிழந்த ஒன்பது வீரர்களின் உடல்களும் ஒன்பது குதிரைகளின் பிரேதங்களும் அந்தக் கணவாய்ப் பாதையிலே கிடந்தன.

அந்தச் செத்த உடல்களினிடையே வஜ்ரபாகு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அந்த உடல்களை அவன் புரட்டிப் பார்த்தும், அவற்றின் உடைகளைப் பரிசோதித்தும் எதையோ பரபரப்புடன் தேடிக் கொண்டிருந்ததாகத் தோன்றியது.

சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மீது பரஞ்சோதி உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் மிகுந்த சோர்வும் அருவருப்பும் குடி கொண்டிருந்தன. கையிலே வாளைப் பிடித்து ஊன்றிக் கொண்டிருந்தான். மடியிலே இரத்தம் தோய்ந்த வேல் கிடந்தது.

சற்று முன்னால் நிகழ்ந்த கொடுமையான ஒரு சம்பவம் பரஞ்சோதியின் மனக் கண் முன்னால் நின்றது. சளுக்க வீரர்களின் மூன்று பேரைப் பரஞ்சோதியும் ஐந்து பேரை வஜ்ரபாகுவும் யமனுலகுக்கு அனுப்பினார்கள். அவர்களுக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்ற ஒன்பதாவது வீரன் சண்டையிடாமல் குதிரையைத் திருப்பி விட்டுக்கொண்டு ஓடப் பார்த்தான். அப்போது வஜ்ரபாகு அதிகப்படியாக அவனிடமிருந்த இரண்டாவது வேலை வீசி எறிய, அது ஓடுகிறவன் முதுகில் போய்ப் பாய்ந்தது. அவனும் செத்து விழுந்தான். அதுவரையில் வஜ்ரபாஹுவின் அஸகாய சூரத்தனத்தைப் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டிருந்த பரஞ்சோதிக்கு அதைப் பார்த்ததும் பெரும் வெறுப்பு உண்டாயிற்று. "ஓடுகிறவன் முதுகில் வேல் எறிவதும் ஒரு வீரமா?" என்று வஜ்ரபாகுவை அவன் மனம் இகழத் தொடங்கியது.

திடீரென்று "ஆ!" என்ற சத்தத்தைக் கேட்டுப் பரஞ்சோதி வஜ்ரபாஹு நின்ற திசையை நோக்கித் திரும்பியபோது, வஜ்ரபாகு ஒரு ஓலையைக் கையில் வைத்துக் கொண்டு படிப்பதைக் கண்டான்.

பிறகு, அவன் விரைந்து வந்து பரஞ்சோதி உட்கார்ந்திருந்த பாறைக்குப் பக்கத்தில் நின்ற தன் குதிரைமீது ஏறிக்கொண்டான்.

பரஞ்சோதி இன்னும் எழுந்திராமல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட வஜ்ரபாகு, "தம்பி! நீ வரவில்லையா?" என்று கேட்டான்.

பரஞ்சோதி ஆசாபங்கமும் அருவருப்பும் நிறைந்த கண்களினால் ஒரு தடவை வஜ்ரபாகுவைப் பார்த்து விட்டு மறுபடி தலையைக் குனிந்து கொண்டான்.

வஜ்ரபாகு குதிரையுடன் பரஞ்சோதியின் அருகில் வந்து, "தம்பி! கைதேர்ந்த வீரனைப்போல் நீ சண்டையிட்டாய். அதி லாகவத்துடன் போர் புரிந்து மூன்று ராட்சஸச் சளுக்கர்களைக் கொன்றாய். இப்பேர்ப்பட்ட வீரச்செயல் புரிந்த உன்னைப் பல்லவ சைனியத்தில் பதினாயிரம் வீரர்களின் தலைவனாக ஆக்கவேண்டும் என்று பல்லவ சேனாதிபதியிடம் சொல்ல எண்ணியிருக்கிறேன். எல்லாம் முடிந்த பிறகு இத்தகைய சோர்வும்

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"இப்படிப்பட்ட கும்பகர்ணனாகப் பார்த்து அந்த நாகநந்தி ஓலையைக் கொடுத்தாரே என்றுதான்."

"இப்போது கூட என்ன? நான் நாகார்ஜுன மலைக்குப் போய் நாக நந்தியின் ஓலையைக் கொடுத்துவிட்டுப் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வருகிறேனே?"

"வீண் வேலை, தம்பி! நாகநந்தி உன்னிடம் கொடுத்த ஓலை அக்கினிக்கு அர்ப்பணமாகி விட்டது!"

"என்ன சொன்னீர்கள்?"

"நாகநந்தியின் ஓலை தீக்கு இரையாகிவிட்டது என்றேன்."

"எங்கே? எப்பொழுது?"

"இரண்டு நாளைக்கு முன்னால் மகேந்திர மண்டபத்தில்!"

"இதோ என்னிடமுள்ள ஓலை?"

"நான் எழுதி வைத்தது, தம்பி!"

"ஆஹா! என்னுடைய சந்தேகம் சரிதான்!" என்று பரஞ்சோதி கூறி, ஓலைச்சுருளை எடுத்து வீசிப் பள்ளத் தாக்கில் எறிந்தான்.

"அன்றிரவு தீபத்தில் ஏதோ மயக்க மருந்து சேர்த்து என்னைத் தூங்க வைத்துவிட்டுத்தானே ஓலையை எடுத்தீர்கள்!"

"ஆமாம்."

வஜ்ரபாகுவை ஆச்சரியமும் பய பக்தியும் ததும்பிய கண்களினால் பார்த்து, "ஐயா! நாகநந்தியின் ஓலையில் என்ன எழுதியிருந்தது?" என்று கேட்டான்.

"புலிகேசியைக் காஞ்சிமா நகருக்கு உடனே வந்து தென்னாட்டின் ஏக சக்ராதிபதியாக முடிசூட்டிக் கொள்ளும்படி எழுதியிருந்தது!"

"அடாடா! அப்படிப்பட்ட ஓலையையா நான் எடுத்துக் கொண்டு வந்தேன்?"

"தெரியாத பாஷையில் யாராவது ஓலை எழுதிக் கொடுத்தால் இனிமேல் எடுத்துக்கொண்டு கிளம்ப மாட்டாயல்லவா?"

"மாட்டேன். அந்த நாகநந்தியின் முகத்தைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை. ஆயனருடைய வார்த்தைக்காகத்தான் வந்தேன். நாகநந்தி யார், ஐயா?"

"அதைத்தான் கண்டு பிடிக்க வேண்டும். வாதாபி மன்னனின் பூரண நம்பிக்கையைப் பெற்றவர் என்று மட்டுந்தான் இப்போது தெரியும்."

"ஐயோ! என்ன மூடத்தனம் செய்தேன்?"

"போனதைப் பற்றி அப்புறம் வருத்தப்படலாம். இதோ அவர்கள் யமனுலகுக்குப் போக வெகு வேகமாக வருகிறார்கள். நீ என்ன செய்யப் போகிறாய்?"

"தங்கள் விருப்பம் எப்படியோ, அப்படி!"

"சரி; இந்தக் கணவாயின் இரு பக்கமும் நாம் இருவரும் நிற்கலாம். முதலில் வருகிற வீரன் மார்பில் உன்னிடமுள்ள ஈட்டியைப் பிரயோகம் செய்! அப்புறம் இந்த வாளை வைத்துக்கொண்டு உன்னால் முடிந்த வரையில் பார். தைரியத்தை மட்டும் இழக்காதே! பக்கத்தில் நான் இருக்கிறேன்" என்று வஜ்ரபாகு கூறி, தான் வைத்திருந்த இரண்டு வாள்களில் ஒன்றைப் பரஞ்சோதியிடம் கொடுத்தான்.

மேலும் அவன் "ஜாக்கிரதை! பல்லவ சக்கரவர்த்திக்கு நீ செய்ய விருந்த பெருந் துரோகத்துக்கு இப்போது பரிகாரம் செய்யப் போகிறாய். இன்றைக்கு உன் வீரத்தைப் பார்த்து விட்டுத்தான் பல்லவ சைன்யத்தில் உன்னைச் சேர்த்துக் கொள்ளலாமா என்று முடிவு செய்யப் போகிறேன்" என்று எச்சரித்தான்.



இதற்குள் வீட்டுவாசலில் காவலிருந்த வீரன் குதிரைகளின் காலடிச் சத்தத்தையும், இவர்களுடைய பேச்சுக் குரலையும் கேட்டு வீட்டைச் சுற்றிக் கொல்லைப்புறம் வந்து பார்த்தான். இரண்டுபேர் குதிரைமேலேறிக் கிளம்பிக் கொண்டிருப்பதை அவன் கண்டு "ஓ!" என்ற கூச்சலுடன் வீட்டுக்குள் ஓடினான். உடனே, அந்த வீட்டுக்குள் வீரர்கள் ஒருவரை ஒருவர் எழுப்பும் சத்தமும், "என்ன? என்ன?" என்று கேட்கும் சத்தமும், "மோசம்!" "தப்பித்து ஓடுகிறார்கள்" என்ற கூக்குரலும் ஒரே குழப்பமாக எழுந்தன. அதே சமயத்தில் வஜ்ரபாகுவும் பரஞ்சோதியும் ஏறியிருந்த குதிரைகள் முதல் நாள் வந்த பாதையில் திரும்பிச் செல்லத் தொடங்கின.

ஆனால், வஜ்ரபாகு குதிரையை வேண்டுமென்றே இழுத்துப் பிடித்து அதன் வேகத்தைக் குறைத்ததுடன் ஆங்காங்கு நின்று நின்று சென்றான். பரஞ்சோதி இந்தத் தாமதத்தைப் பற்றிக் கேட்டபோது, "ஆம், தம்பி! அவர்கள் நம்மை வந்து பிடிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டாமா? அவர்கள்பாட்டுக்கு வழிதப்பி எங்கேயாவது தொலைந்துபோய் விட்டால்? ......" என்றான்.

"போய் விட்டால் என்ன நஷ்டம்?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"இவ்விடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் பாதையில் ஒரு மலைக் கணவாய் இருக்கிறதல்லவா? அந்தக் கணவாயில் துர்க்காதேவி கோயில் ஒன்று இருக்கிறது. நேற்று வரும்போது நீ கவனித்தாயா?"

"இல்லை!"

"நீ எங்கே கவனிக்கப் போகிறாய்? உன்னுடைய கவனமெல்லாம் ஒரு வேளை திருவெண் காட்டுக் கிராமத்திலே இருந்திருக்கும்!......"

"என்ன சொன்னீர்கள்!" என்று பரஞ்சோதி அளவில்லா வியப்புடன் கேட்டான்.

"ஒன்றுமில்லை. அந்தத் துர்க்கையம்மன் கோயில் வழியாக நான் நேற்றைக்கு வந்தபோது, இன்று சூரியோதய சமயத்தில் அம்மனுக்கு ஒன்பது உயிர்களைப் பலி கொடுப்பதாக வேண்டிக்கொண்டு வந்திருக்கிறேன். இவர்கள் வேறு வழியில் போய்விட்டால், என்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற முடியாதல்லவா?"

ஆனால், மேற்கூறிய கிழவனின் வார்த்தைகள் பரஞ்சோதியின் செவியில் விழுந்தனவாயினும், அவன் மனதில் பதியவில்லை.

பெரியதொரு வியப்பு அவனுடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. திருச்செங்காட்டாங் குடியிலிருந்து அவன் கிளம்பியதிலிருந்து, எத்தனை எத்தனையோ தூரம் பிரயாணம் செய்திருக்கிறான்; எவ்வளவோ அதிசய சம்பவங்களைப் பார்த்திருக்கிறான்; எவ்வளவோ அநுபவங்களையும் பெற்றிருக்கிறான். இவ்வளவிலும் இடையிடையே அவனுடைய மனமானது திருவெண் காட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தது. அவனுடைய மாமன் மகள் உமையாள் அப்போது என்ன செய்து கொண்டிருப்பாள் என்றும், தான் திரும்பிப்போய் அவளிடம் தன்னுடைய அதிசய அநுபவங்களையெல்லாம் சொல்லும்போது எப்படி ஆச்சரியப்படுவாள் என்றும் அடிக்கடி அவன் எண்ணமிடுவதுண்டு.

ஆனால் அந்த விஷயம் இந்த வேஷதாரி வஜ்ரபாகுவுக்கு எப்படித் தெரிந்தது என்று நினைத்துப் பரஞ்சோதி ஆச்சரியக் கடலில் மூழ்கினான்.

*   *   *

பல பல வென்று பொழுது விடியும் தருணத்தில் வஜ்ரபாகுவும் பரஞ்சோதியும் ஒரு மலைக்கணவாயை அடைந்தார்கள். அவர்கள் இதுகாறும் வந்த பாதையானது அங்கே குறுகி இருபுறமும் செங்குத்தாக ஓங்கி வளர்ந்த பாறைச் சுவர்களின் வழியாகச் சென்றது. அக் குறுகிய பாதையில் சற்று தூரம் சென்று திரும்பியதும், ஒரு பக்கம் மட்டும் பாறைச் சுவர் உயர்ந்து, இன்னொரு பக்கம் அதல பாதாளமான பள்ளத் தாக்காகத் தென்பட்டது.

இந்த இடத்துக்கு வந்ததும் வஜ்ரபாகு குதிரையை நிறுத்தினான்; பரஞ்சோதியையும் நிறுத்தச் செய்தான்.

காலை நேரத்தின் குளிர்ந்த இளங்காற்று மலைக் கணவாயின் வழியாக ஜிலு ஜிலு வென்று வந்தது.

பட்சிகளின் மனோகரமான குரல் ஒலிகளுடன் தூரத்திலே குதிரைகள் வரும் காலடிச் சத்தமும் டக், டக், டக், டக் என்று கேட்டது.

"தம்பி! உன்னை மறுபடியும் கேட்கிறேன். அந்தச் சளுக்க வீரர்கள் வருவதற்குள்ளே தீர்மானமாய்ச் சொல்! உனக்கு என்னோடு வருவதற்கு இஷ்டமா?" என்று வஜ்ரபாகு கேட்டான்.

"இந்தக் கேள்வியை இப்போது கேட்டு என்ன பிரயோஜனம்? உங்களோடுதான் வந்துவிட்டேனே? இனிமேல் திரும்பிப் போக முடியுமா?"

"அதில் ஒன்றும் கஷ்டமில்லை. உனக்கு இஷ்டமில்லா விட்டால் இப்போதுகூட நீ திரும்பிப் போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்."

"சேர்ந்து கொண்டு?......"

"அவர்கள் போகுமிடத்துக்கு நீயும் போகலாம்."

"அவர்கள் எங்கே போகிறார்கள்?"

"நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் போகப்போவது யமலோகத்துக்கு!"

"யமலோகத்துக்கு அவர்களை அனுப்பப்போவது யார்?"

"உனக்கு இஷ்டமிருந்தால் நீயும் நானுமாக. இல்லா விட்டால் நான் தனியாக."

பரஞ்சோதி சிறிது யோசித்துவிட்டு, "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் போகிற இடம் சொன்னால் தான் வருவாயா?"

"சொல்லா விட்டாலும் வருவேன்; ஒரு காரியத்துக்காகக் கேட்கிறேன்."

"பல்லவ சைன்யம் தண்டு இறங்கியிருக்கும் இடத்துக்குப் போகிறேன்."

"ஆஹா! அப்படித்தான் நினைத்தேன்" என்றான் பரஞ்சோதி.

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நேற்றெல்லாம் பிரயாணம் செய்த போது யோசனை செய்ததில் தெரிந்தது."

"இன்னும் என்ன தெரிந்தது?"

"நீங்கள் காஞ்சி சக்ரவர்த்தியின் ஒற்றன் என்றும் தெரிந்தது. உண்மை தானே?"

"ஆகா! உன்னை என்னமோ என்று நினைத்தேன். வெகு புத்திசாலியாயிருக்கிறாயே?"

பரஞ்சோதி "ஐயா! நான் உங்களுடன் வந்தால் பல்லவ சைனியத்தில் என்னையும் ஒரு வீரனாகச் சேர்த்துக் கொள்வார்களா?" என்று கேட்டான்.

"கட்டாயம் சேர்த்துக் கொள்வார்கள். பல்லவ ராஜ்யத்துக்கு நீ பெரிய சேவை யல்லவா செய்திருக்கிறாய்?" என்றான் வஜ்ரபாகு.

"நானா? பல்லவ ராஜ்யத்துக்கு நான் என்ன சேவை செய்தேன்?"

"நாகநந்தியின் ஓலையைக் கொண்டு வந்தது ஒன்று; மகேந்திர மண்டபத்தில் அசந்து தூங்கியது இன்னொன்று."

"உங்கள் பிதிர்களை நீங்கள்தான் அவிழ்க்க வேண்டும்" என்றான் பரஞ்சோதி.

"ஆகட்டும்; நீ என்ன முடிவு செய்தாய்?"

"உங்களுடன் வருவதென்றுதான். என்னை அழைத்துப் போவீர்கள் அல்லவா?"

"நிச்சயமாய் அழைத்துப் போகிறேன். நான் எங்கே போகிறேன் என்று ஏதோ காரியார்த்தமாகக் கேட்பதாகச் சொன்னாயே? அது என்ன காரியம்?"

"என்னிடமுள்ள ஓலையை என்ன செய்வதென்று யோசித்தேன். ஒரு வேளை நீங்கள் நாகார்ஜுன பர்வதம் போவதாயிருந்தால்..."

"ஓலையை அதோ தெரிகிற பள்ளத்தாக்கிலே ஓடும் தண்ணீரில் போடு. அதனால் இனிமேல் பிரயோஜனம் ஒன்றுமில்லை."

"நாகநந்தியும் ஆயனரும் எவ்வளவு ஏமாற்றமடைவார்கள்?"

"ஆமாம்; நாகநந்தி பெரிய ஏமாற்றந்தான் அடைவார்!" என்று கூறிவிட்டு, வஜ்ரபாகு கலகலவென்று சிரித்தான்.



அத்தியாயம் 44

மாயக் கிழவன்

கிழவனுடைய கையில் வேல் ஒன்று இருப்பதையும் அதை வாங்கிக் கொண்டு கிளம்பும்படி கிழவன் சமிக்ஞை செய்வதையும், பலகணி வழியாக வந்த பின்னிரவு நிலவின் மங்கிய ஒளியில் பரஞ்சோதி உற்றுப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. இன்னதென்று தெரியாத சந்தேகங்களினாலும் குழப்பத்தினாலும் பரஞ்சோதி சிறிது தயங்கியபோது, கிழவன் அவனுடைய ஒரு கையைத் தன்னுடைய இடது கையினால் அழுத்திப் பிடித்தான். உடனே பரஞ்சோதிக்குப் பழைய ஞாபகம் ஒன்று வரவே அந்த மாயக் கிழவன் கொடுத்த வேலை வாங்கிக்கொண்டு துள்ளி எழுந்தான்.

இருவரும் வீட்டின் கொல்லைப்புறம் வழியாக வெளியே வந்தார்கள். பரஞ்சோதி தன்னுடைய குதிரையும் இன்னொரு குதிரையும் அங்கே ஜீனம் பூட்டி ஆயத்தமாக நிற்பதைக் கண்டான். இருவரும் குதிரைகள் மேல் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள்.

பரஞ்சோதி எதிர்பார்த்ததுபோல், கிழவன் தாவி ஏறியதும் அவனுடைய குதிரை பாய்ச்சலில் கிளம்பவில்லை. பரஞ்சோதிக்கு முதுகுப் புறத்தைக் காட்டிய வண்ணம் அவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். எனவே, பரஞ்சோதியும் தன் குதிரையை இழுத்துப் பிடிக்க வேண்டியதாயிற்று.

தாமதம் செய்து கொண்டிருந்த கிழவன் நடுவில், "தம்பி! என்னை யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டான்.

"தாடியைப் பார்த்து முதலில் ஏமாந்துதான் போனேன். கையைப் பிடித்து அமுக்கியதும்தான் தெரிந்தது. பிசாசுக்குப் பயப்படாத சூரர் வஜ்ரபாஹு தாங்கள் தானே?" என்றான் பரஞ்சோதி.

'ஹா ஹா ஹா' என்று உரத்த சத்தத்துடன் சிரித்துக் கொண்டு கிழவன் திரும்பியபோது, அவன் முகத்திலிருந்த நரைத்த தாடியைக் காணோம். தாடி நீங்கிய முகம் வீரன் வஜ்ரபாகுவின் முகமாகக் காட்சியளித்தது.

"அதிகமாக யோசிப்பதற்கு இப்போது அவகாசமில்லை தம்பி! என்றாலும், யோசித்துச் சொல்லு. என்னோடு வருவதற்கு உனக்குச் சம்மதமா?" என்று வஜ்ரபாகு கேட்க, பரஞ்சோதி, "எனக்கு வரச் சம்மதம் தான். உங்களுக்குத்தான் இங்கிருந்து போகும் உத்தேசம் இல்லை போலிருக்கிறது!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று வஜ்ரபாகு கேட்டான்.

"பின்னே, இப்படிச் சத்தம் போட்டுப் பேசுகிறீர்களே? அவர்கள் விழித்துக்கொள்ள மாட்டார்களா?"

"அவர்களை எழுப்புவதற்காகவே தான் இரைந்து பேசுகிறேன். தூங்குகிறவர்களை ஏமாற்றிவிட்டு ஓடித் தப்பித்துக்கொண்டான் என்ற அவப்பெயர் அச்சுத விக்கிராந்தனுடைய வம்சத்தில் உதித்தவனுக்கு வரப்படுமா?" என்று வஜ்ரபாகு கூறி, எதையோ நினைத்துக் கொண்டவன் போல் இடி இடியென்று சிரித்தான்.

உயிருடன் எழுந்து பீமனுடன் மறுபடி யுத்தத்தைத் துவக்கினான்!

இதைக் கண்டு பீமன் ஏக்கமடைந்தான். அச்சமயம் கிருஷ்ணன் ஒரு புல்லை எடுத்து இரண்டாகக் கிழித்துக் கால் மாற்றிப் போட்டுச் சமிக்ஞையாகக் காட்டினான். பீமசேனன் உடனே இதன் பொருளை அறிந்து கொண்டு மறுபடியும் ஜராசந்தனை இரண்டாகக் கிழித்து அப்படியே போடாமல் கால் மாற்றிப் போட்டு எறிந்தான். கிழிபட்ட துண்டங்கள் ஒன்றுகூட முடியாமல் உயிரற்றுக் கிடந்தன. ஜராசந்தன் மாண்டான்.

சிறைபட்ட அரசர்களை விடுவித்து ஜராசந்தனுடைய குமாரன் சகதேவனுக்கு இராஜ்யாபிஷேகமும் செய்து விட்டுக் கிருஷ்ணனும் பீமார்ச்சுனர்களும் ஊர் திரும்பினார்கள்.

அதன்பின் பாண்டவர்கள் திக்விஜயம் செய்து ராஜசூய யாகத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். யுதிஷ்டிரன் ராஜாதிராஜன் என்கிற பதவியை அடைந்தான். அப்போது கூடிய ராஜ சபையில்தான் அவமரியாதையாக நடந்துகொண்ட சிசுபாலன் கிருஷ்ணனால் கொல்லப்பட்டான்.

சிரமம் வேண்டாம்!



கணவன்:—ஒரு சமயம் இன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வர முடியவில்லை யென்றால், ஆபீஸ் பையனிடம் கடிதாசு கொடுத்தனுப்புகிறேன். நாம் இன்றொரு நாள் சினிமாவுக்குப் போய்க் கொள்வோம்.

மனைவி:—எதற்குப் பியூனிடம் சிரமப்பட்டு அனுப்புகிறீர்கள்? அந்தக் கடிதாசியை உங்கள் சட்டைப் பையிலிருந்து நானே எடுத்துக் கொண்டு விட்டேன்!

படித்துப் பார்!

சினிமா ...?

[ஆசிரியர்: பி. எஸ். ராமய்யா. பிரசுரம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை: ரூ 3—8—0]

“வாழ்க்கைச் சந்தையில் கடை கடையாக மாறிக்கொண்டே யிருந்தேன். ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு தினுசான வியாபாரம். அங்கங்கே அந்தந்த வியாபாரத்தைக் கற்க முயன்றேன். ஆனால் எதிலும் காலூன்றி நிற்க முடியவில்லை. ஸ்வபாவத்தில் அதற்கு வேண்டிய பொறுமையில்லை எனக்கு.”

இப்புத்தகத்தின் ஆசிரியரான ஸ்ரீ ராமய்யா தம்மைப் பற்றி இப்படிக் கூறிக் கொள்கிறார். அவர் இப்படி ஓரே இடத்தில் காலூன்றி நிற்காமல், கடைக்குக் கடை மாறிக்கொண்டு போனது ரொம்ப ரொம்ப நல்லதாகப் போய் விட்டது என்றே தோன்றுகிறது. அவர் அப்படி “கடைக்குக் கடை” மாறி யிருக்காவிட்டால் சினிமாக் கலையைப் பற்றிய இந்த அருமையான புஸ்தகம் வெளிவந்திருக்க முடியுமா?

சினிமாவைப் பற்றி எழுதுவதற்கு சினிமாத் துறை, எழுத்துத்துறை இரண்டிலும் அனுபவம் வேண்டும். அத்தகைய அனுபவம் வேண்டிய அளவு படைத்தவர் ஸ்ரீ பி. எஸ். ராமய்யா. சிறந்த கலைப் பண்பு வாய்ந்த சிறு கதைகள் பல எழுதிப் பெயரும் புகழும் பெற்றவர். பிறகு, சினிமாத் துறையில் புகுந்து “கண்ணகி” முதலிய படங்களில் விசேஷ அனுபவம் பெற்றவர்.

இத்தகையவர் சினிமாவைப் பற்றி எழுத முன் வந்தது மிகப் பொருத்தமானதாகும்.

“இந்தப் புஸ்தகம் உங்களுக்குத் திருப்தியாக இருந்து, இதே விஷயத்தைப் பற்றி இன்னும் விவரமான ஒரு நூல் வெளியிட வேண்டியது அவசியம் என்று நீங்கள் கருதினால் தயவுசெய்து ஒரு வரி எங்களுக்கு எழுதுங்கள்” என்று இந்தப் புத்தகத்தில் பிரசுரகர்த்தர்கள் பதிப்புரையில் வேண்டிக் கொள்கிறார்கள்.

இந்தப் புஸ்தகம் நமக்குத் திருப்தி யளிக்கிறது: பரிபூரண திருப்தி யளிக்கிறது. ஆகவே, இதே விஷயத்தைப் பற்றி விவரமான வேறு நூல் வேண்டியதில்லை யென்று நாம் கருதுகிறோம். புதிய புத்தகத்தில் இன்னும் என்ன விவரம் வெளியாகக் கூடுமென்று நமக்குத் தெரியவில்லை. உண்மையில், இதைத் தொடர்ந்து சினிமாவைப் பற்றி வேறு புஸ்தகங்கள் வெளி வருவதற்கே வழியில்லாமல் செய்து விட்டார் ஆசிரியர். பிறர் எழுதுவதற்கு என்று ஏதாவது ஒரு விஷயம் விட்டு வைக்க வேண்டுமே, கிடையாது.

சினிமாவைப் பற்றித் தமிழில் இதுதான் முதல் புஸ்தகம் என்று சொல்லப்படுகிறது. முதல் புஸ்தகம் என்பதுடன் முதல்தரமான புஸ்தகம் என்பதில் சந்தேகமில்லை.

சினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்கள், ஈடுபடும் நோக்கமுள்ளவர்கள் எல்லாருக்கும் இந்த நூல் மிகவும் உபயோகமானதாகும். அதோடு, தமிழ் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களுக்கும் மிகுந்த ஆனந்தமளிக்கும் புத்தகம்.

னால் ஜராசந்தன் அளவு கடந்த உடல் வன்மை பெற்று வளர்ந்தான். ஆனால், அவனுடைய உடல் இரண்டு கூறுகளாகப் பிறந்து ஒன்று கூடிய உடலானபடியால், இரு கூறாகப் பிரியும் தன்மையும் பெற்றிருந்தது.

* * *

“ஜராசந்தனுடைய துணையாளர்களான ஹம்ஸன், இடிம்பகன், கம்சன் இவர்கள் இறந்து விட்டார்கள். ஜராசந்தனை வதம் செய்வதற்கு இதுதான் சமயம். சேனைகளையும் படைகளையும் கொண்டு அவனை எதிர்த்துப் போர் செய்யப் பார்ப்பதில் பயனில்லை. அவனைத் தனிச் சண்டையில் இழுத்துத் தான் வெல்ல வேண்டும்” என்று கண்ணன் நிச்சயித்தான்.

அக்காலத்து வழக்கத்தின்படி பகைவன் போருக்கு அழைத்தால் க்ஷத்திரியன் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். மல் யுத்தமானாலும் அல்லது வில்லும் தேரும் சாதனமாகக் கொண்ட யுத்தமானாலும் க்ஷத்திரிய வழக்கப்படி இரு பட்சமும் சமமாக ஒப்புக்கொண்டு நடத்த வேண்டும். இந்த வழக்கத்தை உத்தேசித்துக் கிருஷ்ணனும் பாண்டவர்களும் சதி செய்தார்கள்.

தருப்பையும் மரவுரியுமாக விரதம் பூண்டவர்களுடைய வேஷத்தோடு நீர் வளமும் அழகிய கிராமங்களும் நகரங்களும் நிறைந்த மகத தேசம் போய்ச் சேர்ந்தார்கள். ஜராசந்தனுடைய ராஜதானியை அடைந்தார்கள்.

ஜராசந்தன் அப சகுனங்களைக் கண்டான். அதற்காகப் புரோகிதர்களைக் கொண்டு சாந்தி செய்வித்து அரசனும் உபவாச விரதமிருந்தான். ஆயுதமில்லாமல் கிருஷ்ணனும் பீமார்ச்சுனர்களும் அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள். ஜராசந்தன் யாரோ உயர் குலத்து அதிதிகள் வந்தார்கள் என்று எதிர்கொண்டழைத்து வழக்கப்படி மரியாதை செய்து, “ஸ்வாகதம்” என்றான்! அதர்மத்துக்குப் பயந்து பீமனும் அருச்சுனனும் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார்கள். கிருஷ்ணன், அரசனுக்குச் சமாதானமாக, “இவர்கள் இருவரும் இப்போது ஒரு விரதம் எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் பேச வில்லை. நடு இரவு ஆன பின்தான் இவர்கள் பேச முடியும்” என்றான். ஜராசந்தன் அவர்களைத் தன் யாக சாலையில் இருக்கச் செய்து தன் மாளிகைக்குச் சென்றான்.

பிறகு நடு இரவில் வந்து மறுபடியும் அவர்களைக் கண்டான். எந்த வேளையானாலும் உயர் குலத்தைச் சேர்ந்த ஸ்நாதகர்களை அவர்கள் சௌகரியப்படி கண்டு பேசுவது ஜராசந்தனுடைய வழக்கம். ஆகையால் நடு நிசியில் வந்து தனக்காகக் காத்திருந்த அதிதிகளைக் கண்டு விசாரிப்பதற்காக வந்தான். அவர்களுடைய நடத்தையைக் கண்டு ஜராசந்தனுக்குச் சந்தேகம் தோன்றிற்று. அதன்பின் கைகளில் வில்லின் நாண் உரைத்த காய்ப்புகளையும் மற்ற க்ஷத்திரியச் சின்னங்களையும் கண்டு கொண்டான்.

“உண்மையைச் சொல்லுங்கள்” என்று ஜராசந்தன் கேட்க, அவர்களும் “நாங்கள் உன் சத்துருக்கள். உடனே யுத்தத்துக்குத் தயாராவாயாக. எங்கள் மூவரில் யாருடன் வேண்டுமானாலும் உன் இஷ்டப்படி தீர்மானித்துச் சண்டை செய்யலாம்” என்றார்கள். வந்தவர்கள் மூவரும் யார் என்று தெரிந்து கொண்ட பின் ஜராசந்தன், “கிருஷ்ணா! நீ இடையர் குலத்தில் பிறந்தவன். அருச்சுனனோ சிறுவனாக இருக்கிறான். பீமன் தேக பலத்தில் புகழ் பெற்றவன். ஆகையால் அவனுடன் யுத்தம் கோருகிறேன்” என்று சொல்லி, உடனே பீமனுடன் கைகளையே ஆயுதமாகக் கொண்ட மல் யுத்தம் செய்யும்படி அழைத்தான். பீமன் ஆயுதமின்றி நின்றபடியால் ஜராசந்தனும் அவ்வாறே ஆயுதங்கள் ஏதுமின்றி மல் யுத்தம் செய்யத் தீர்மானித்தான்.

* * *

பீமனும் ஜராசந்தனும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தும் தாக்கியும் பதின்மூன்று நாட்கள் ஆகாரமாவது ஓய்வாவது இல்லாமல் இரவும் பகலும் சண்டை செய்தார்கள். பதினான்காவது நாள் ஜராசந்தன் களைப்புற்றுத் தயங்கினான்.

“இதுதான் இவனை வதம் செய்ய வேண்டிய சமயம்” என்று கிருஷ்ணன் பீமனைத் தூண்டினான். பீமன் ஜராசந்தனைத் தாக்கி நூறு சுழல் சுழற்றிக் கீழே போட்டுக் கால்களைப் பிடித்து உடலை இரண்டாகக் கிழித்துப் போட்டுக் கர்ஜித்தான். கிழிபட்ட இரண்டு பாகங்கள் உடனே தாமாக ஒன்று சேர்ந்துகொண்டன. ஜராசந்தன்

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஜராசந்தன் வதம்

மூன்று அக்ஷௌஹிணி சேனைகளுக்குத் தலைவனும் மிக்க பராக்கிரமசாலி என்று புகழ் பெற்றவனுமான பிருகத்ரதன் என்பவன் மகத நாட்டை ஆண்டான். அவன் காசி ராஜனுக்கு இரட்டையாகப் பிறந்த இரண்டு பெண்களை விவாகம் செய்து கொண்டான். "உங்கள் இருவரில் யாருக்கும் நான் எந்த விதத்திலும் பட்சபாதமாக நடக்க மாட்டேன்" என்று பிருகத்ரதன் தன் இரு மனைவிகளுக்கும் சபதம் செய்து கொடுத்தான். பலநாள் காத்தும் பிருகத்ரதன் சந்தானப் பேறு பெறவில்லை. இளமைப் பருவம் தாண்டி முதுமையை அடைந்தான். பிறகு ராஜ்யத்தை மந்திரிகளிடம் விட்டு விட்டு வனம் சென்று மனைவிகளுடன் தவத்தில் ஈடுபட்டான். கௌதம வம்சத்தைச் சேர்ந்த சண்டகௌசிகர் என்ற முனிவரிடம் ஒரு நாள் சென்று தன் குறையைச் சொல்லிக் கொண்டான். அவர் இவனிடம் கருணை கொண்டு, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். பிருகத்ரதன், "சுவாமி! ராஜ்யத்தை விட்டு விட்டுச் சந்ததி இல்லாமல் தபோவனத்துக்கு வந்திருக்கும் பாக்கியமற்ற எனக்கு என்ன வேண்டுமா யிருக்கிறது?" என்று சொன்னான். முனிவர் இந்தச் சொல்லைக் கேட்டு மனமிரங்கி தியானத்தில் ஆழ்ந்தார். அப்போது மரத்தடியில் இருந்த அவர் மடியில் ஒரு மாங்கனி விழுந்தது. அதை அவர் எடுத்து, "இதைப் பெற்றுக் கொள். உன் குறை தீரும்" என்று சொல்லி அரசனை ஆசிர்வதித்து அனுப்பினார்.

அரசன் அந்தப் பழத்தைத் தன் இரண்டு மனைவிகளுக்கும் இரண்டு பங்காகச் செய்து இருவருக்கும் கொடுத்தான். அவர்கள் அதை உண்ட பின் சிலநாள் கழித்துக் கருப்பம் தரித்தார்கள். காலத்தில் பிரசவமும் ஆயிற்று. ஆனால் இரண்டு மனைவிகளும் மனம் நொந்து முன்னைவிட அதிகமான துயரத்தில் அழுந்தும்படி நேரிட்டது. குழந்தைகளுக்குப் பதில் ஒரு தேகத்தின் இரண்டு கூறாக, ஒரு மனைவி ஒரு கூறையும், மற்றொரு மனைவி மற்றொரு கூறையும் பெற்றார்கள். ஒரு கை, ஒரு கால், அரை முகம், ஒரு கண், ஒரு காது—இவ்வாறு பயங்கரமாக உயிருள்ள இரண்டு உடற் கூறுகளை இருவரும் பெற்றார்கள். துக்கத்தினால் பீடிக்கப்பட்டு அமங்கலமான பிண்டங்களைப் பார்த்து வெறுப்புக் கொண்டு, துணியில் மூடி எங்கேயாவது கொண்டு போய் எறிந்து விடும்படி தாதிகளிடம் சொன்னார்கள். அவ்வாறே அந்த இரண்டு மாமிசப் பிண்டங்களையும் தாதிகள் கொண்டு போய்த் தெருக் குப்பையில் எறிந்து விட்டார்கள்.

மாமிசம் தின்னும் ஒரு அரக்கி அந்த இடத்தில் வந்து இரண்டு கண்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து எடுக்கப் போகும் போது, உடனே இரண்டும் ஒன்றுகூடி உயிர் கொண்டு ஒரு சிசுவாயிற்று. அரக்கி இதைக் கண்டதும் இக் குழந்தையைக் கொல்லத் தகாது என்று எண்ணி, அழகிய மானிட உருவம் தரித்துக் கொண்டு அரசனிடம் போய், 'இது உன் குழந்தை' என்று சொல்லிக் கொடுத்தான். அரசன் அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டு அதை மனைவிகளிடம் ஒப்புவித்தான்.



இந்தக் குழந்தையே ஜராசந்தன். முனிவர் வரத்தி

ஆகாசவெடி

"இடி விபத்துக் காரணமாக சிவசமுத்திரம் மின்சார நிலையம் சேதமடைந்ததால், 50,000 தொழிலாளர்களுக்கு வேலையில்லாமற் போய் விட்டது."

—மைசூர் செய்தி.

50,000 தொழிலாளர்களும், தங்களுக்கு வேலையில்லை என்ற செய்தியைக் கேட்டு இடி விழுந்த மாதிரி ஆகியிருப்பார்கள்.

★

"வங்கத்தில் பட்டினிக்குப் பலியானவர்கள் 35 லக்ஷம் என்று கல்கத்தா சர்வ கலாசாலை விசாரணையிலிருந்து தெரிகிறது. இந்தியா மந்திரி அமெரி துரையோ 6,98,000 பேர்தான் என்கிறார்."

—ஒரு செய்தி.

அமெரி சொன்னால் சொன்னதுதான்; இறந்துபோன 35 லக்ஷம் பேர்களே வந்து மறுத்தாலும் அதை ஒப்புக் கொள்ள முடியாது.

★

"நாலு வருஷங்களாக கார்ப்பொரேஷன் கமிஷனர் பதவியிலிருந்து நல்ல பெயர் வாங்கிய புல்லா ரெட்டியை அரசியலில் ஈடுபட வேண்டுமென்று ஸ்ரீ முத்தையா செட்டியார் கூறுகிறார்."

—ஒரு செய்தி.

நல்ல பெயருடன் இருக்கும் புல்லா ரெட்டி மீது ஸ்ரீ முத்தையா செட்டியாருக்கு என்ன கோபமோ தெரியவில்லை.

★

"மகாத்மாஜியைத் தரிசிக்க இன்று ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், பணக்காரர்களும், ஏழைகளும் மாபெருங் கூட்டமாக வந்து கூடியிருந்தனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மழையும் வந்தது."

—ஒரு செய்தி.



இவர்களெல்லாம் இப்படிக் கூட்டமாக வந்து மகாத்மாஜியை ஓய்வு எடுத்துக் கொள்ள முடியாமல் தொந்தரவு செய்வது மழைக்கு விருப்பமில்லை போலும்!

"திங்கட்கிழமை இரவு கல்கத்தா சுற்று வட்டாரத்தில் உள்ள சணல் ஆலையில் தீப்பற்றிப் பல மில்கள் நாசமடைந்தன. விபத்தின் காரணம் தெரியவில்லை."


—ஒரு செய்தி.

விபத்துக்குக் காரணம் தீதான் என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறதே!

★

"மகாத்மா காந்தி ஜின்னாவைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று ஸ்ரீ வாரி எம். எல். ஏ. கூறியதைப் புரொபஸர் அப்துல் மஜீத்கான் எதிர்க்கிறார்.

—லாகூர் செய்தி.



"யாரும் லாரிக்குக் குறுக்கே நிற்க வேண்டாம்" என்று ஒரு பாதசாரி கூறுகிறார்!

★

"புஸ்தகக் கடை ஒன்றில் புகுந்து, இதனால் தான் தண்டனை அடைய வேண்டுமே என்பதைக்கூட மதிக்காமல், ஒருவன் 1000 திருப்புகழ்ப் புஸ்தகங்களைத் திருடிக் கொண்டு போய் விட்டான்."

—ஒரு செய்தி.

"திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வழிவாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உந்தனருளாலே!"

★

"....ஓட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் திடீரென்று கலகம் ஏற்பட்டு ஒருவரை யொருவர் கற்களால் வீசுவதுமாதிரி வடைகளைக் கொண்டு தாக்கினர்." —ஒரு செய்தி.

இப்போது ஓட்டல்களில் கொடுக்கும் வடைகளுக்கும் கற்களுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை அவர்கள் தெரிந்துகொண்டுதான் அப்படிச் செய்திருக்க வேண்டும்.

★

"பம்பாய் சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்க நூற்றுக் கணக்கான மாணவர்களுக்குச் 'சீட்டு'க் கிடைக்கவில்லை. 'சீட்டு'க் கிடைக்குமா என்று மாணவர்கள் சந்தேகப் படுகிறார்கள்."

—ஒரு செய்தி.

எதற்கும் சீட்டுப் போட்டுப் பார்த்து விடுவதுதானே?

ராஜா வந்தார்!

— சாவி —

[உளுந்தூர் சமஸ்தானம். உளுந்து ராஜா சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். எதிரில் உள்ள ஆசனத்தில் கடுகு மந்திரி அமர்ந்திருக்கிறார்.]

உளுந்து ராஜா:—மந்திரி! நாட்டில் யுத்தமெல்லாம் எப்படியிருக்கிறது?

மந்திரி:—அதை ஏன் கேட்கிறீர்கள்? ஆண்டியெல்லாம் அரசர்களாகிறார்கள். அரசர்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறார்கள். கேவலம் விறகுக் கட்டை, மண்ணெண்ணெயெல்லாம் கூடப் பிரசித்தி யடைந்து விட்டன.

உ. ராஜா:—அப்படியா? நான் மட்டும் பேர் ஊர் ஒன்றுமில்லாமல் இருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

[உளுந்து ராஜா 'கடகட' வென்று சிரிக்கிறார். அந்த சப்தம் யந்திரத்தில் உளுந்து உடைபடுவது போல் கேட்கிறது.]

கடுகு மந்திரி:—அரசே! ஒரு யோசனை; அப்படிச் செய்தால் தங்கள் பெயர் ஊரெல்லாம் அடிபடும். தஞ்சாவூர் கோயில் கோபுரம் எவ்வளவு பிரசித்தியோ, அவ்வளவு பிரசித்தி வாய்ந்தது தமிழர்களின் தனிப் பெரும் சின்னமாக விளங்கும் இட்டிலியும்.

ராஜா:—ஆமாம்; அதற்கும் நான் பிரசித்தி அடைவதற்கும்......

மந்திரி:—அவசரப்படுகிறீர்களே? இட்டிலிக்கு அவசியமான — உடலுக்கு 'ஆத்மா' வைப் போன்ற — பொருளல்லவா நீங்கள்? நீங்கள் இல்லாவிட்டால் இட்டிலி இல்லை. எனவே நீங்கள் சில தினங்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து கொஞ்சம் தலை மறைவாய் இருங்கள். பிறகு பாருங்கள்; தங்கள் பெயர் பத்திரிகைகளிலெல்லாம் எப்படி அடிபடுகிறதென்று?

ராஜா:—சபாஷ்! உன் யோசனைப் படியே நடக்கிறேன்.

[மந்திராலோசனை முடிகிறது.]

இருபது தினங்களுக்குப் பின்

ராஜா:—என்ன மந்திரியாரே! எங்கேயும் என்னைப் பற்றித்தான் பேச்சாமே?

மந்திரி:—ஆமாம்; ஆமாம். யாரைக் கண்டாலும் தங்கள் பேச்சுத்தான். நம் யோசனை பலித்து விட்டது!

ராஜா:—பேஷ்! யாரோ வாசற் கதவை 'மொத்து மொத்'தென்று தட்டும் சப்தம் கேட்கிறதே, யார் அது?

[கடுகு மந்திரி எழுந்து போய்ப் பார்க்கிறார். ஒரு பெரிய இட்டிலிக் கூட்டம் உளுந்து அரசனை பேட்டி காணத் தெருவில் காத்துக் கிடக்கிறது.]

மந்திரி:—அரசே! தர்பாரை நோக்கி ஒரு பெரிய இட்டிலிக் கூட்டம் 'தூது' வந்திருக்கிறது.

உளுந்து ராஜா:—என்ன! இட்டிலியா? உளுந்து இல்லாமல் இட்டிலிகள் எப்படிச் செய்தார்கள்?

[ராஜா மூர்ச்சையாகிறார். கடுகு மந்திரி அரசனுக்கு இரண்டு இட்டிலியும் காப்பியும் கொடுத்து மூர்ச்சை தெளியச் செய்கிறார்.]

கடுகு மந்திரி:—அரசனே! தங்களுக்குத் தெரியாது இந்த சென்னை ஓட்டல்காரர்கள் சமாசாரம். அவர்கள் எமகாதகர்கள்! கல்லிலிருந்து நாரை உரிப்பார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு உளுந்தில்லாமல் இட்டிலி செய்வதுதானா ஒரு பிரமாதம்?

[இதற்குள் இட்டிலிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து வந்த இட்டிலியே தர்பாருக்குள் பிரவேசிக்கிறது.]

இட்டிலி:—மகாராஜா! நமஸ்காரம்! தங்களை இனி நான் ஒரு கணமும் பிரிந்து இருக்க முடியாது. என்னை எல்லோரும் பழிக்க ஆரம்பித்து விட்டார்கள். நீங்களும் நானும் அவ்வளவு ஒற்றுமையோடு இருக்தோமே? மலரும் மணமும் போல் என்று சொல்லுவதைப் போல் உளுந்தும் இட்டிலியும் போல் வாழ்ந்து வந்தோமே? இப்படி என்னைப் பிரிந்து வந்து விட்டீர்களே? சென்னைவாசிகள் நீங்கள் இல்லாததால் நல்ல இட்டிலியாகக் கிடைக்காமல் தவியாய்த் தவிக்கிறார்கள்.

ராஜா:—அப்படியா? சரி; நான் ஆசைப் பட்டபடி பேர் எடுத்தாகி விட்டது. இனி நான் சென்னை நகரத்துக்கு ஆயிரக்கணக்கில் மூட்டை மூட்டையாகப் படை யெடுத்து வந்து சென்னைவாசிகளுக்கு அபயப் பிரதானம் அளிக்கிறேன். சென்று வாருங்கள்.

[இட்டிலிக் கூட்டம் சந்தோஷத்தோடு திரும்பிச் செல்கிறது.]

கடுகு மந்திரி:—நானும் தங்களைப்போல் கொஞ்ச நாள் மறைந்திருந்து பெயர் வாங்க விரும்புகிறேன் ... என்ன சிரிக்கிறீர்கள்? எனக்கு மட்டும் ஆசை யிருக்காதா? 'ரோஷம்' கிடையாதா? 'கடுகு செத்தாலும் காரம் போகாது' என்று கேள்விப் பட்டதில்லையா?



ஜொலிக்கும்

கண்கள் . . .

நல்ல ஆரோக்கியத்தை அளிக்கின்றன. உங்களுடைய ஆரோக்கியத்திற்கும் அழகிற்கும், ஸ்திரீகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட வைடமின் சத்து நிறைந்த சாந்தி - அசோகாவை உட்கொள்ளுங்கள். ஏனெனில் அது வைடமின் சத்து நிறைந்த டானிக் மட்டுமல்லாமல் ஸ்திரீகளின் சகலவிதமான வியாதிகளையும் அறவே அகற்றும் அநேக நூற்றாண்டுகளாகப் புராதனமான அசோகா என்னும் மூலிகையும் சேர்ந்துள்ளது.

சாந்தி அசோகா

சிறந்த கர்ப்பாசய ஔஷதம்

சாந்தி குடீரம், தனுகு, மேல்கோதாவரி ஜில்லா.

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

ஸ்ரீ கிருஷ்ண ஜெனரல் ஸ்டோர்ஸ், தனுகு.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள் :

எஸ். விஸ்வநாதம் & கம்பெனி,

44, பந்தர் தெரு, சென்னை.

T. K. S. சகோதரர்களின்

நாடகம்

காரைக்குடி

ஷண்முக விலாஸில்

★

ஔவையார்

(உரிமை பெற்றது)

★

5-7-44 முதல் 12-7-44 வரை

தினமும் இரவு 10-30 மணிக்கு

எதிர்பாருங்கள் :

"கந்தலீலா"

"பார்கோ"

உயர்தரமான கருட்டுகளுக்கு

ஓர் கண்யமான பெயர்

ஆகையால் கண்யமான

உபயோகத்திற்கு

'பார்கோ' கருட்டுகளே

மிகச் சிறந்தவை.

தென் இந்தியாவில் முக்கியமான

இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை

அனுபவமுள்ளவர்

விண்ணப்பிக்கவும்

முக்கிய விற்பனையாளர்கள் :

S. E. A. C.

தபால் பெட்டி 158. — மதராஸ்

அப்படி இராஜ சன்மானத்தை வெறுத்த தியாகராஜர் தெருக்களில் கையில் தம்பூராவுடன் பக்தி பரவசமாய்ப் பாடிக்கொண்டே உஞ்ச விருத்தி எடுத்தார். வீதியில் ஜனங்கள் கூட்டங்கூடி அவருடைய திவ்ய கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்தித்தார்கள்.

அப்படிப்பட்ட தியாகய்யரின் கீர்த்தனங்களைப் பாடுகிற வித்வான்கள், பொதுஜனங்களைப் பற்றி, "அவர்களுக்குச் சங்கீதம் என்ன தெரியும்?" என்று அவமதிப்பது பெரும் பிசகாகும்.

பழையகாலத்தில் ராஜாக்கள் சங்கீதத்தை வளர்த்தார்கள் என்று சொல்லுவதெல்லாம் பெருந் தவறு. பழைய காலத்து ராஜாக்களினால் சங்கீதத்தில் சிருங்கார ரஸ அம்சம் அளவுமீறி வளர்ந்து குட்டிச் சுவராயிற்று.

இந்தக் காலத்தில் சில சமஸ்தான மன்னர்கள் சங்கீதத்தை நல்ல முறையில் வளர்க்கிறார்கள். ஆனால் அவர்களும் பொதுஜன அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்தே சங்கீதத்தை வளர்க்கிறார்கள். முதலில் பொதுஜனங்களிடையில் பாடி அவர்களுடைய ஆதரவை நன்கு பெற்றிருக்கும் வித்வான்களைத்தான் சமஸ்தானங்களில் ஆஸ்தான வித்வான்களாகச் செய்கிறார்கள்.

இதையெல்லாம் நன்கு யோசித்துப் பார்க்கும் எந்த வித்வானுக்கும் பொதுஜனங்களைப்பற்றி அலட்சியமாகப் பேசத் தோன்றாது.

2. "சங்கீதம் கேட்கும் பொதுஜனங்களுக்குச் சங்கீதத்தைப் பற்றி விமர்சனம் செய்யும் பாத்தியதை உண்டா? இல்லையா?" என்பது இரண்டாவது கேள்வி.

"நியாயமாய் உண்டு. ஏனெனில், அவர்களுக்கும் காது இருக்கத் தானே செய்கிறது?" என்று ஸர் ஸி. பி. விடை கூறியிருக்கிறார்.

இந்த விடைக்கு ஒரு சிறு திருத்தம் மட்டும் செய்ய விரும்புகிறேன்.

அந்தக் காதானது கர்நாடக சங்கீதத்தை அடிக்கடி கேட்டு, பலரிடமும் கேட்டு, பண்பட்ட காதாயிருக்கவேண்டும்.

"வித்வானுக்குத் தெரிந்ததைவிட விமரிசகருக்கு நூறு பங்கு தெரிந்திருக்க வேண்டும்" என்பது அர்த்தமற்ற பேச்சு!

அல்லது வித்வான்களைப்போல் விமரிசகரும் சரளி வரிசையில் ஆரம்பித்துப் பல்லவி ஸ்வரம் வரையில் பாடம் பண்ணியிருக்க வேண்டுமென்று சொல்லுவதும் அசம்பாவிதம்.

அம்மாதிரி சங்கீத வித்தையை அப்பியசித்தவர்கள் தாங்களே வித்வான்களாகி விடுவார்கள். அவர்கள் எந்தக் கச்சேரியையும் விமரிசனம் செய்ய முடியாது.

வேறு எந்த வித்வானுடைய பாட்டையும் நல்ல பாட்டு என்று அவர்களால் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படி ஒப்புக்கொண்டாலும், செத்துப்போன வித்வான்களின் பாட்டைத்தான் ஒப்புக்கொள்வார்கள்.

அவர்கள் தங்கள் சங்கீத 'பாணி' ஒன்றுதான் சரியான பாணி என்றும், மற்றதெல்லாம் சப்பாணி என்றும் கருதுவார்கள்.

பல வித்வான்களுடைய பாட்டையும் கேட்டுப் பழகிய ரஸிகர்களால்தான் சரியான முறையில் சங்கீத விமரிசனம் செய்ய முடியும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

* * *

ஸர் ஸி. பி. சங்கீத சம்பந்தமாக வெளியிட்ட சரியான கருத்துக்களுக்காக அவரைப் பாராட்டுகிறேன். அவர் பிரஸ்தாபியாமல் விட்ட விஷயத்துக்காக இன்னும் அதிகமாய்ப் பாராட்டுகிறேன்.

இந்தப் பிரசங்கத்தில் அவர் தமிழிசையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. "சங்கீதத்துக்குப் பாஷை என்னத்துக்கு?" என்ற கேள்வியையும் போடவில்லை.

சங்கீத சபைகளையும், விழாக்களையும் ஆரம்பித்து வைக்கிறவர்கள் இது விஷயத்தில் ஸர் ஸி. பி. யின் உதாரணத்தைப் பின்பற்றினால் சர்வ சௌக்யமாயிருக்கும்.

தியாகராஜநகர் சங்கீத சபையைத் திறந்து வைத்தபோது ஸ்ரீ புல்லா ரெட்டி ஒரு சிறந்த உண்மையை எடுத்துக் காட்டினார்.

"அவரவர்கள் இஷ்டம்போல் சங்கீதக் கலையை வளர்க்கட்டும். எது நல்லதோ, எது சிறந்ததோ, அது தான் நிலைத்து நிற்கும். வீண் விவாதம் என்னத்திற்கு?" என்றார் புல்லா ரெட்டி.

ரொம்பவும் சரியான பேச்சு.

தாய் பாஷையிலே பாட்டுக் கேட்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கேட்டுக் கொண்டு போகட்டும்.

மற்றவர்கள் அவர்களை எதிர்த்துக் குறை கூறி, "தாய் பாஷை விரோதிகள்" என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்வானேன்?

களில் வளர்க்க வேண்டும்" என்று ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் கூறினார்.



இதை ஆமோதித்துப் பேசிய மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார், "உண்மைதான்; கர்நாடக சங்கீதத்தைப் புது முறைகளில் வளர்க்க வேண்டியதுதான். ஆனால் இந்த சங்கீத வித்வான்கள் இருக்கிறார்களே, இவர்கள் வெகு பிடிவாதக்காரர்கள். பழைய வழியிலிருந்து இவர்களை அசைப்பது பிரம்மப் பிரயத்தனம்" என்றார்.

சாஸ்திரியாரின் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கிறது.

ஆனால் எல்லா சங்கீத வித்வான்களையும் பற்றி இவ்விதம் சொல்வதற்கில்லை. இக்காலில் ஆங்கிலக் கல்வி கற்று பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் சங்கீதத் துறைக்கு வருகிறார்கள். நவீனக் கல்வி இல்லாதவர்களிலும் புதிய முறையில் தைரியமாகப் பிரவேசிக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.

உதாரணமாக, அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் இருக்கிறார். நமது சங்கீதக் கச்சேரிகளுக்கு ஒரு புதிய பாணியை அமைத்துக் கொடுத்த பெருமை அவருடையது. முப்பது வருஷமாக சங்கீதத் துறையில் உழைத்தும், நேற்று வந்த இளம் வித்வானைப்போல் உற்சாகத்துடன் புதிய முறைகளை அவலம்பிக்கும் சக்தி அய்யங்காரிடம் இருக்கிறது.

எனவே, ஸர் ஸி. பி., மகாகனம் சாஸ்திரியார் போன்றவர்கள் தகுந்த வழியில் ஊக்கமளிக்கும் பட்சத்தில் புதிய முறைகளில் சங்கீதத்தை வளர்ப்பது அசாத்தியமாகாது.

* * * *

கர்நாடக சங்கீதத்தைப் பற்றிய இன்னும் இரண்டு முக்கியமான பிரச்னைகளைப் பற்றி ஸர் ஸி. பி. திட்டமான அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். அவை இரண்டும் சமீபத்தில் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் கிளப்பிய பிரச்னைகள் ஆகும். சமஸ்தான வித்வான் கிளப்பிய பிரச்னைகளுக்கு சமஸ்தான திவானிடமிருந்தே தக்க பதில் கிடைத்திருக்கிறது.

1. "கர்நாடக சங்கீதம் நாலு பேர் இரகசியமாகக் கூடி அநுபவிக்க வேண்டிய கலையா? அல்லது பொது ஜனங்கள் நேராகக் கூடி அநுபவிக்கக் கூடியதா?" என்பது முதல் கேள்வி.

"நாலுபேருக்குப் பாடுவதுதான் நல்ல சங்கீதம்; அதற்குமேல் கூட்டங் கூட்டிப் பாடுவது மட்டமான சங்கீதம்" என்ற அருமையான கருத்தைச் செம்மங்குடி வெளியிட்டார்.

இந்தக் கொள்கையைச் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் தாம் அனுஷ்டிக்கவில்லையென்றாலும், அதை வெளியிட்டதிலிருந்து பொது ஜனங்களைப் பற்றிய அவருடைய அபிப்பிராயம் வெளியாகிறது.

"நாலு பேர்" என்று செம்மங்குடி குறிப்பிடுவது யாரை என்றால், "உம்முடைய பாட்டுத்தான் பாட்டு; மற்றதெல்லாம் பாட்டே இல்லை, அமுகை!" என்று முகஸ்துதி செய்யும் விசிறிகளைத்தான்.

ஆனால் ஸர் ஸி. பி. இந்தக் கருத்தைக் கண்டிப்பாக மறுக்கிறார். "சங்கீதக் கலை எல்லாரும் அநுபவிக்கக் கூடியது; அநுபவிக்க வேண்டியது. கர்நாடக சங்கீதத்தை இன்னும்பொதுஜனங்கள் ஏராளமாக அநுபவிக்கும்படி அதை விஸ்தரித்து மேன்மைப் படுத்த வேண்டும்" என்று சொல்லுகிறார்.

இதுதான் சரியான கொள்கை என்பதில் என்னளவும் ஐயமில்லை.

சங்கீதம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகள் ஏதோ திருட்டுத்தனமாகக் கதவைச் சாத்திக் கொண்டு அநுபவிக்க வேண்டிய கலைகள் அல்ல. சங்கீத சபைகளில் எவ்வளவுக்குக் கூட்டம் அதிகமாகிறதோ அவ்வளவுக்குச் சபையில் ஒவ்வொருவருடைய சங்கீத அநுபவமும் அதிகமாகிறது.

எனவே, அதிகமான ஜனங்கள் கேட்கக் கேட்கத்தான் சங்கீதக் கலை உயரும்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியிடம் சிலர் வந்து, "தஞ்சாவூர் ராஜா உம்முடைய சங்கீதத் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்திருக்கிறார். மகாராஜாவிடம் நீர் போனால் நல்ல சன்மானம் கிடைக்கும்" என்றார்கள். அதை ஸ்ரீ தியாகய்யர் மறுத்து, "நிதி(ச்)சால சுகமா?" என்ற கீர்த்தனம் பாடியது பிரசித்தம்.

ஆடல் பாடல்

“கர்நாடகம்”

யாருடைய அபிப்பிராயங்களாவது தவறாகவும் கோணலாகவும் இருந்தால் அவர்களைச் சீர்திருத்துவதற்கு ஒரு நல்ல வழியை நான் கண்டுபிடித்திருக்கிறேன். அதாவது, அப்படிப்பட்ட ஆசாமியைப் பிடித்து வைஸ்ராய் நிர்வாக சபையில் ஓர் அங்கத்தினராகச் செய்யவேண்டியது. அவர் அங்கத்தினராகிச் சில நாளைக்குள் சண்டை போட்டுக்கொண்டு வெளியிலும் வந்துவிட வேண்டியது. அப்புறம் பாருங்கள், அவருடைய அபிப்பிராயம் என்னமாதிரி நல்ல வழிக்கு வருகிறது என்று!

யாரை மனதில் வைத்துக்கொண்டு இதையெல்லாம் நான் சொல்கிறேன் என்பதை நேயர்கள் ஊகித்திருப்பார்கள். அவர்தான்: ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்தான்.

* * *

கலைகளை நல்ல முறையில் வளர்ப்பதின் மூலமாக உலகத்தையே சீர்திருத்தி உருப்படச் செய்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் தொண்டு செய்து வருபவர்களில் அடையாறு ஸ்ரீமதி ருக்மணிதேவி ஒருவர். சென்ற சில வருஷமாக அடையாறு கலா க்ஷேத்திரத்தில் பரதநாட்டியக் கலை பிரதான ஸ்தானத்தை வகித்து வந்தது. இந்த வருஷத்திலிருந்து கர்நாடக சங்கீதத்தை நல்ல முறையில் வளர்க்கும் தொண்டையும் கலாக்ஷேத்திரம் மேற்கொண்டிருக்கிறது. சென்னை யுனிவர்ஸிடியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்கீத சிரோமணி வகுப்பை நடத்தும் பொறுப்பைக் கலா க்ஷேத்திரம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

யுனிவர்ஸிடிகளின் விஷயம் நமக்கு ஒருவாறு தெரிந்ததுதான். யுனிவர்ஸிடியினால் அமைக்கப்பட்டிருக்கும் பாடங்கள் பெரும்பாலும் அபத்தமாயும், காரியத்துக்கு உதவாத வெட்டிச்சுரைக்காயாகவும் இருப்பது வழக்கம். எனவே, யுனிவர்ஸிடி பாடங்களைக் கடனுக்காகத் தொலைத்த பிறகு, உண்மையான சங்கீதத்தையும் மேற்படி சிரோமணி வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்களென்று நம்புகிறேன்.

“கலை விஷயங்களில் பழமையானதுதான் மேன்மையானது” என்று ஒரு கொள்கை உண்டு. ஸ்ரீமதி ருக்மணிதேவி பழமைப் பற்று மிகுந்தவர் என்பது பிரசித்தம். நவீன ஆபரணங்கள் நாளுக்கொன்றாக வந்து கொண்டிருந்த காலத்தில், ஸ்ரீமதி ருக்மணி தேவி தைரியமாகக் கையில் வங்கியும் காலில் கொலுசும் அணிந்துகொண்டு நடன மேடைக்கு வந்து எல்லாரையும் திகைக்கச் செய்தார்.

இன்னும் அவருடைய பழமைப் பற்றை அறியவேண்டுமானால், இந்த வாரத்தில் அடையாற்றில் நடக்கும் கச்சேரிகளைக் கொண்டு அறியலாம். டைகர் வரதாச்சாரியார், மைசூர் வாஸுதேவாச்சாரியார், மழவராயனேந்தல் சுப்பராம பாகவதர் ஆகிய பழங்கிழவர்களைக் கொண்டு சங்கீதக் கச்சேரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்.

ஆனால், பழமைப் பற்று மட்டும் இருந்தால் போதுமா? போதாது. பழமையே போதுமென்றிருந்தால் கலை வளர்ச்சியே இல்லாமல் போய்விடும். பழமையானது அடிப்படையாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையின் மேல் புதிய புதிய முறைகளில் கலை மாளிகைகளை அமைக்க வேண்டும். பரத நாட்டியக் கலைக்கு இந்தத் திருப்பணியை ஸ்ரீமதி ருக்மணிதேவி செய்து வருகிறார். பழமையை அடிப்படையாக வைத்துக் கொண்டு புதுமைகளைப் புகுத்தி வருகிறார். அதே விதமான தொண்டைக் கர்நாடக சங்கீதத்துக்கும் அவர் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

* * *

கலாக்ஷேத்திரத்தில் சங்கீத சிரோமணி வகுப்பை ஆரம்பித்து வைத்த ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் மேற்படி அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பது அறிந்து மகிழ்கிறேன். “கர்நாடக சங்கீதம் நமது அபூர்வமான பிதிரார்ஜித செல்வம். ஆனால் அதை அப்படியே பொத்திப் பொத்தி வைத்துத் துருப்பிடிக்க விடக்கூடாது. புதிய முறை


யுத்த டீ
கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 220

காகிதக் கண்ட்ரோலரிடம் சொல்லி. மற்றப்படி, மேலும் நம் வாசலில் நின்று வீண் ஆசையைக் கிளப்பாமல் உடனே திரும்பிப் போய்விடும்படி நல்ல வார்த்தையாகக் கேட்டுக் கொள். அப்படித் தொந்தரவு செய்யாமல் போய்விடும் பட்சத்தில் அடுத்தப் புது வருஷப் பிறப்பன்று கடவுளுக்கு ஏதாவது ஒரு கே. ஸி. ஐ. இ. அல்லது ஓ. பி. இ. அல்லது ஒரு கெயிஸரி ஹிண்ட் மெடல் தருவதற்குச் சிபார்சு செய்யப்படுமென்றும் சொல்லி வை!''

அந்தரங்கக் காரியதரிசி வெளியே போய்விட்டு மறுபடியும் சீக்கிரமாகத் திரும்பி வந்தார்.

''ஸாக்ரடீஸ், பிளேட்டோ, ஹோமர், மார்க்கஸ் அரீலியஸ், ஸெயிண்ட்பால், மார்ட்டின் லூதர் ஆகியவர்கள் வந்திருக்கிறார்கள்.''

''எதற்காக?''

''தங்களைப் பார்ப்பதற்காகத்தான்.''

''சரியாப் போச்சு! இன்றைக்கு என்ன எல்லாருக்கும் என்னைப் பார்ப்பதில் இவ்வளவு ஆசை? இருக்கட்டும், அவர்களிடம் எனக்கு இப்போது வேலை ரொம்ப ரொம்ப இருப்பதாகவும் யுத்தம் முடிந்ததும் நானே சொல்லி அனுப்புகிறேன் என்றும் மரியாதையாகத் தெரிவித்துத் திருப்பி அனுப்பு.''

காரியதரிசி போய்விட்டு மீண்டும் திரும்பி வந்தார். இந்தத் தடவை கையில் ஒரு கடிதம் கொண்டுவந்தார்.

வேவல் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, ''அடாடாடா! இது என்ன கூத்து?'' என்றார்.

''என்ன?'' என்று காரியதரிசி கேட்டார்.

''என்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏன் இப்படி எல்லாரையும் பிடித்துக்கொண்டிருக்கிறது?''

''எல்லாம் தாங்கள் வீற்றிருக்கும் பதவியின் மகிமைதான். இப்போது யார்?''

''மிஸ்டர் காந்திக்கும் என்னைப் பார்க்க வேண்டுமாம்!''

''பதில் என்ன?''

''மேற்படி மேற்படி மேற்படிதான். எழுதிக் கொள்ளும். இப்போது நான் காந்தியைப் பார்த்தாலும் அல்லது காந்தி என்னைப் பார்த்தாலும் ஜனங்களின் மனதில் வீண் ஆசைகளும், நம்பிக்கைகளும் கொப்புளித்து அவர்களை ரொம்பவும் வேதனைக்கு உள்ளாக்கும். இந்த யுத்த சமயத்தில் அப்படிப்பட்ட ஏமாற்றத்தை ஜனங்களுக்கு அளிப்பது நியாயம் இல்லை. ஆகையால், மிஸ்டர் காந்தி முதலில் அவருடைய உடம்பைப் பார்த்துக் கொள்ளட்டும். அப்புறம் இந்தியாவின் க்ஷேமத்துக்காக அவருக்குத் தோன்றக் கூடிய யோசனைகளைக் காகிதத்தில் சாங்கோபாங்கமாக எழுதி எனக்கு அனுப்பட்டும். அவற்றை நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், காகிதப் பஞ்சத்தைக் கவனிக்காமல், சர்க்கார் அச்சுக் கூடத்தில் அச்சடித்து வெளிப்படுத்த ஒப்புக்கொள்கிறேன். இந்தப்படிக்குப் பதில் எழுதிக் கையெழுத்துக்குக் கொண்டு வாரும்!''

* * *

வைஸ்ராய் வேவலை வாழ்த்துகிறோம்!

இந்திய மக்களிடம் அவருக்கு இருக்கும் கருணையை வாழ்த்துகிறோம்!

நம்முடைய உள்ளங்களில் அநாவசியமான ஆசைகளைக் கிளப்பிப் பின்னால் ஏமாற்றமடையச் செய்யக் கூடாது என்னும் அவருடைய அருமையான நோக்கத்தை வாழ்த்துகிறோம்!

ஆம், மகாத்மா காந்தி வைஸ்ராய் வேவலைப் பார்த்தால் நம்முடைய மனதில் என்னவெல்லாமோ ஆசைகள் உண்டாகும்தான்!

ஒரு வேளை வைஸ்ராய் வேவலிடம் அன்னை கஸ்தூரி பாயின் உயிரையும் மகாதேவ தேஸாயின் உயிரையும் மகாத்மா கேட்டு வாங்கிக் கொண்டு வந்து விடுவார் என்றுகூட நாம் ஆசைப்பட்டாலும் படுவோம்.

இன்னும் வங்காளப் பஞ்சத்தில் செத்துப்போன பல லட்சம் உயிர்களையும் வைஸ்ராயைக் கேட்டு மகாத்மா கொண்டு வந்து விடுவார் என்று நம்பினாலும் நம்பி விடுவோம்.

நம்முடைய ஆசைக்கும் நம்பிக்கைக்கும்தான் அளவே யில்லை யல்லவா?

இப்படியெல்லாம் நமக்குப் பிற்பாடு ஆசாபங்கம் ஏற்படாதபடி ஆரம்பத்திலேயே கல்லைத் தூக்கிப் போட்டு நமது ஆசையை முளையிலேயே கொன்ற வைஸ்ராய் வேவலை வாழ்த்துகிறோம்.

அவர் நன்றாயிருக்கட்டும்!

அவர் மட்டும் நன்றாயிருக்கட்டும்!

வேவலை வாழ்த்துகிறோம்!

ஏந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அதிகாரத்துக்குக் கட்டுப் பட்டுச் சூரியன் தினசரி காலையில் உதித்துக் கொண்டும் மாலையில் அஸ்தமித்துக் கொண்டும் இராத்திரி வேளையில் வந்து நம் பிராணனை வாங்காமல் ஒழுங்காக நடந்து கொண்டும் வருகிறதோ, அப்பேர்ப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஏகப் பிரதிநிதியாக இந்த விஸ்தாரமான தேசத்தை ஆண்டு வரும் லார்ட் வேவல் துரையானவர், ஒரு நாள் காலையில் வழக்கம்போல் கண்ணைத் திறந்து பார்த்ததும் பொழுது விடிந்திருப்பதைக் கண்டார். சூரியன் எப்போதும் போல் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்டு டைமை அனுசரித்து உதித்தானா என்று பார்த்து விட்டு, காலைக் கடனுதிகளை முடித்துக் கொண்டு வந்து தமது அதிகார சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

அப்போது அவருடைய அந்தரங்கக் காரியதரிசி உள்ளே வந்து ஒரு ராணுவ ஸல்யூட் அடித்து விட்டு, "மேன்மை தங்கிய பிரபுவே! வாசலில் ஓர் ஆசாமி வந்திருக்கிறார். தங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார். கட்டளை என்ன?" என்று கேட்டார்.

"பேர்வழி யார்?" என்று வேவல் வினவினார்.

"ஏசு என்று பெயர் சொல்கிறார்."

"பார்ப்பதற்கு எப்படியிருக்கிறார்?"

"முகத்திலே தாடியிருக்கிறது. மார்பிலும் கையிலும் ஆணி பாய்ந்த அடையாளங்கள் இருக்கின்றன. கண்களில் ஜலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்."

"ஆ! அது அவருடைய வழக்கம். இருக்கட்டும். உடை எப்படி அணிந்திருக்கிறார்? இராணுவ உடை தரித்திருக்கிறாரா? அல்லது ...."

"அதுதான் இல்லை. 'சுதேசி' இந்தியர்களைப் போல் வேஷ்டி உடுத்திக் கொண்டு போர்வை போர்த்திக் கொண்டிருக்கிறார்."

இதைக் கேட்ட வைஸ்ராய் வேவல் சற்று நேரம் கண்ணையும் மனதையும் மூடிக் கொண்டு யோசனை செய்தார். பிறகு சொன்னார்:—"அவரிடம் நல்ல வார்த்தையாகச் சொல்லும்! தற்சமயம் அவர் என்னைப் பார்க்க அனுமதித்தேனுனால், ஜனங்களின் மனதில் அது வீண் நம்பிக்கையையும் நிறைவேற முடியாத ஆசைகளையும் கிளப்பும். ஆகையால் இப்போது பார்க்க முடியவில்லை என்று சொல்லும். அதோடு, பர்மாவை மீண்டும் பிடிப்பது சம்பந்தமாக ஏதாவது திட்டமான யோசனைகள் அவர் சொல்வதற்கிருந்தால் அவற்றைக் காகிதத்தில் ஒரு பக்கத்தில் மார்ஜின் விட்டு டைப் அடித்து அனுப்பும்படி சொல்லும். பிறகு அவசியமாயிருந்தால் நானே அவரைக் கூப்பிட்டனுப்புகிறேன் என்றும் தெரியப்படுத்தும்."

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டு அந்தரங்கக் காரியதரிசி வெளியே போனார்.

உடனே வைஸ்ராய் வேவல் அன்றைக்கு லார்ட் மவுண்ட் பேட்டன் காரியாலயத்திலிருந்து வந்த அறிக்கையைப் படிக்கலானார்.

படித்து முடிப்பதற்குள் காரியதரிசி மீண்டும் உள்ளே வந்து, "யாரோ கடவுளாம்! தங்களைப் பேட்டி காண விரும்புகிறார்!" என்றார்.

"யார்? யார்?"

"கடவுள்! கடவுள்!"

"எந்தக் கடவுள்?"

"டைட்டில், கிய்டில் ஒன்றும் வாங்காத வெறும் கடவுள்!"

"ஓஹோ!" என்று வேவல் சிறிது நேரம் மூளையை வறட்டிக் கொண்டார். பிறகு, "நான் இச்சமயம் வேறு யாரைப் பார்த்தாலும், கடவுளை மட்டும் பார்க்கக் கூடாது. பார்த்தால், ரொம்ப ரொம்ப வீண் ஆசைகளையும் நம்பிக்கைகளையும் ஜனங்களின் மனதில் எழுப்பியதாகும். தயவு செய்து சத்தம் போடாமல் அவரைத் திரும்பிப் போகச் சொல்லு. ஏதாவது தெரிவிக்க வேண்டுமானால் காகிதத்தில் எழுதி மூன்று பிரதிகள் எடுத்து அனுப்பச் சொல்லு. ஒன்று எனக்கு, ஒன்று அமெரிக்கு, ஒன்று சர்ச்சிலுக்கு. இதற்குக் காகிதம் வேண்டுமானாலும் தரச் சொல்கிறேன்,

போய் மகாத்மாவைத் தரிசித்து விட்டு வந்தார்கள். இதை யெல்லாம் பார்க்கும்போது, ராஜாஜியும் இவ்வளவு தாமதியாமல் சற்று முன்னாலேயே போயிருந்தால் நன்று யிருந்திருக்கும் என்று தோன்றுகிறது.

எதிர்பார்க்க வில்லை

இரண்டு வருஷத்துக்கு முன்னால் ராஜாஜி கூறிய தீர்க்க திருஷ்டியுள்ள யோசனைகளைச் செவிகொடுத்துக் கேட்காமல் புறக்கணித்த காரணத்தினால் தேசம் மகத்தான நஷ்டத்தை அடைந்து விட்ட தென்றும், கையில் வருவதற்கிருந்த சுதந்திரம் வெகு தூரம் தள்ளிப் போய் விட்டதென்றும் நாம் கருதுகிறோம். அதற்குப் பிறகு இந்த இரண்டு வருஷத்தில் அரசியல் நிலைமை இன்னும் அதிக சிக்கலையும் குழப்பத்தையும் அடைந்திருக்கிறது. ஜின்னா மரக் கொம்பிலும் வேவல் மலை உச்சியிலும் உட்கார்ந் திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரையோ இருவரையுமோ இறங்கி வரச் செய்வது இலேசான காரியமாயில்லை. அவர்களை இலட்சியம் செய்யாமல் சுதந்திரப் போரை நடத்துவதற்கு அநுகூலமான நிலைமையும் தற்சமயம் இல்லை. எனவே, ராஜாஜியும் காந்திஜியும் இப்போது சந்தித்துப் பேசுவதினாலே நல்ல பலன் கட்டாயம் ஏற்பட்டு விடுமென்றோ, அரசியல் சிக்கல் அவசியம் தீர்ந்து விடுமென்றோ நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், இந்த நிலைமைக்கு ஏதாவது நல்ல முறையில் பரிகாரம் ஏற்படுவதா யிருந்தால், அது இந்த ராஜாஜி-காந்திஜி சந்திப்பினால் தான் ஏற்பட வேண்டுமென்று நாம் நம்புகிறோம்.

அடுத்த சந்தர்ப்பம்

தற்போதைய அரசியல் நிலைமை இவ்வளவு அதிருப்திகரமா யிருப்பதினால், நாம் நிராசை யடைந்து மனச் சோர்வுக்கு இடம் கொடுப்பதும் பிசகாகும். ஒரு தேசத்தின் சரித்திரத்தில் ஏதோ ஒரு சந்தர்ப்பம் போய் விட்டால் அதனால் அடியோடு குடி முழுகிப் போன தாகாது. நாளையோ, மறுநாளோ, மறுபடியும் சந்தர்ப்பம் வந்துதான் தீரும். அப்படி வரப்போகும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்து அதையாவது நன்கு பயன்படுத்திக் கொள்ள நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய ஒற்றுமை பலத்தைத் தேடிக்கொண்டு கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் மகாத்மா காந்தி சிறைக்கு வெளியில் இருப்பது அத்தியாவசியம். உண்மையில் தேச பக்தியும் காந்தி பக்தியும் உள்ளவர்கள் எல்லாம் இப்போது செய்ய வேண்டிய பிரயத்தனம், மகாத்மா மறுபடியும் சிறைக்குப் போகாமல் பார்த்துக் கொள்வதே யாகும்.

முன்னேற்பாடு!

இப்பொழுது டெல்லியில் குடியேறி யிருக்கும் பர்மா சர்க்கார் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று விசாரித்து வந்தவர்களுக்கு உபயோகப் படக்கூடிய தகவல் ஒன்று இப்பொழுது கிடைத்திருக்கிறது. "யுத்தத்திற்குப் பிறகு பர்மாவின் ஜனத்தொகையை நிர்ணயிக்க பர்மா சர்க்காருக்கு உரிமை உண்டா இல்லையா?" என்ற சந்தேகத்தை அவர்களாகக் கிளப்பி விட்டுக்கொண்டு, "உண்டு! பேஷாக உண்டு!" என்று அடித்துச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். ஜனத்தொகையைப் பெருக்கவோ, குறைக்கவோ கடவுளால்தான் முடியும் என்று இதுவரை எண்ணியிருந்தோம். ஆனால், பர்மிய சர்க்கார் சர்வ வல்லமையுள்ள கடவுளின் வேலையையும் பிடுங்கிக் கொள்கிறோம் என்கிறார்கள்.

பர்மாவின் ஜனத்தொகையை நிர்ணயிக்கும்போது, அங்கு குடியேறியுள்ள இந்தியர்களை பர்மாக் காரர்களுடன் சேர்த்து எண்ணுவதா, வேண்டாமா — என்ற விஷயம் இப்பொழுதே அவர்களுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. பர்மாவில் நிரந்தரமாகக் குடியேறிய இந்தியர்களை பர்மாக் காரர்களாகவே எண்ணி விடலாம் என்று அவர்கள் யோசிக்கிறார்கள். இந்த யோசனைப்படி பார்க்கப்போனால் அந்த இந்தியர்களுக்கு இந்தியாவின் பிரஜா உரிமை போய் விடும். ஆகவே, இது விஷயமாகத் தீர ஆலோசிப்பதற்கு ஒரு ஸெலக்ட் கமிட்டியை நியமித்திருக்கிறார்களாம். ரொம்ப ரொம்ப சந்தோஷம். நாளைக்கு நடக்கப்போகும் விஷயத்திற்கு இவ்வளவு முன்னேற்பாடாக பர்மா சர்க்கார் வேலை செய்து வருவதைப் பாராட்டுகிறோம். இந்த முன் ஜாக்கிரதையும் புத்திசாலித்தனமும் இரண்டு வருஷத்துக்கு முன்பே பர்மா சர்க்காருக்கு வந்திருந்தால் எவ்வளவோ சிலாக்கியமா யிருந்திருக்கும். பர்மாவை ஜப்பானியரிடம் பறி கொடுக்கவேண்டிய அவசியமே ஏற்பட்டிரா தல்லவா?

ஐந்து ரூபாய் பரிசு: ***சென்ற இதழில் வெளியான ''நியாயந்தான்!'' என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ந. இராமதுரை, தந்தி பரிந்தி சாலை, கோடம்பாக்கம்.***

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 39

என்ன சேதி?

ராஜாஜி பிரயாணம்

இந்தக் காலத்தில் யார் சிநேகிதர், யார் சிநேகிதரல்லாதவர் என்று கண்டு பிடிப்பதே கஷ்டமாயிருக்கிறது. சற்றும் எதிர்பாராத மனிதர்கள் நம்முடைய சிநேகிதர்களாக முன் வந்து நமக்காகப் பரிந்து பேசி நம்மைத் திக்குமுக்காடச் செய்து விடுகிறார்கள். இவ்விதம் அரசியல் உலகில் சென்ற வாரத்தில் ஒரு சம்பவம் நடந்தது. ஸ்ரீ சி. ஆர். ரெட்டியார் ராஜாஜிக்காகப் பரிந்து ஓர் அறிக்கை வெளியிட்டார். "மகாத்மா காந்தி எல்லாரையும் அழைத்துப் பேசினாரே; ராஜாஜியை மட்டும் ஏன் அழைக்கவில்லை? இது பெரிய அநீதி. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது" என்றெல்லாம் சக்கைப் போடு போட்டிருந்தார். இதைப்படித்த சில புத்திசாலிகள் உடனே பதில் பாணம் போட்டார்கள். "எங்கள் காந்திஜி உங்கள் ராஜாஜியை அழைக்க மாட்டார்! எதற்காக அழைக்க வேண்டும்? இந்த ஸி. ஆரின் வன்னல்தான் முன்னமே வெளியாகி விட்டதே?" என்று கொக்கரித்தார்கள். இந்தக் காரசாரமான விவாதம் பத்திரிகையில் வெளியான அதே தினத்தில் ராஜாஜி பூனா போய்ச் சேர்ந்தார்; காந்திஜியையும் பார்த்தார். அவர்களுடைய சம்பாஷணை பல நாள் தொடர்ந்து நடைபெறும் என்னும் செய்தியும் வந்தது.

தாமதம் ஏன்?

உண்மையில், மகாத்மாவிடமிருந்து ராஜாஜிக்கு அழைப்பு வராமல் இல்லை. ராஜாஜி மகாத்மாவைப் பார்க்கப்போவதற்கு அழைப்பு தேவையும் இல்லை. காந்திஜி விடுதலையானதும் அவரைப் பார்க்க அடுத்த ரயிலிலேயே ஓடினவர்கள் எல்லாரும் அழைப்பு வந்தா போனார்கள்? காந்திஜியை முதன் முதலில் பார்த்தவர்கள் என்பதாகத் தங்களுடைய பெயர்களும் பத்திரிகைகளில் வரவேண்டுமென்ற மூர்த்தன்ய ஆசையானது அவர்களை ஒரே மூச்சில் ஜூஹூ கொண்டு போய்ச் சேர்த்தது! கூவம் ராஜாவின் குமாரர் கோபம் ராஜா ஓட்டம் ஓட்டமாகப் போய் மகாத்மாவைப் பார்த்து விட்டு வந்து, "காந்தி என்றால் சாக்ஷாத் காந்திதான். படத்தில் பார்த்த காந்தி மாதிரியே தத்ரூபம் இருக்கிறார்!" என்று ஓர் அறிக்கை வெளியிட்டார். 'பயனியர்' பத்திரிகையின் ஆசிரியர் மிஸ்டர் கேட்லி மௌனவிரதமிருந்த மகாத்மாவுடன் தாமே பதினைந்து நிமிஷம் சரமாரியாகச் சம்பாஷணை நடத்திவிட்டுத் திரும்பிப் போய்ப் பத்தி பத்தியாகத் தாம் மகாத்மாவைச் சந்தித்த விவரத்தைப் பற்றி எழுதினார். ரயில் பிரயாணம் செய்ய முடியாதவர்கள் பலர் மகாத்மா காந்திக்குத் தங்களுடைய பூரண பக்க பலம் இருப்பதைக் கையெழுத்துப் போட்டுப் பகிரங்கப் படுத்தினார்கள்! ஆனால் ராஜாஜி மகாத்மாவைப் பார்க்கப் போகாமலும் அறிக்கை ஒன்றும் விடாமலும் இருந்த காரணம் என்ன? "முதலில் மகாத்மாவின் உடம்பு குணமடைய வேண்டும்" என்னும் அவருடைய கவலைதான் காரணம். ஆனால், மகாத்மாவின் தேக நலத்தில் அவ்வளவு கவலை மற்றவர்கள் காட்டவில்லை. தாங்கள் போய் மகாத்மாவிடம் பேச வேண்டியதுதான் தாமதம், உடனே அரசியல் பிரச்னை தீர்ந்து விடும் என்று எண்ணியவர்களாய்ப் பலர் ஓடோடியும் போய்ப் பேசினார்கள். அரைகுறையான செய்திகளைப் பத்திரிகை நிருபர்கள் கயிறு திரித்து வெளியிட்டு நிலைமையை எவ்வளவு மோசமாக்கலாமோ அவ்வளவும் ஆக்கினார்கள். பொதுஜனங்களும் தங்களுடைய பங்குக்கு வேலியை உடைத்துக் கொண்டு

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 39 | 1944 ஜூலை 9 | தாரண ௵ ஆனி 26


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



கானகம் சென்று ஆனிரை கன்று மேய்த்த கண்ணன் எவ்வளவு ஆனந்தமான தொழிலை மேற்கொண்டான் என்பது இந்த இளங் கன்றுகளைப் பார்த்ததும் நமக்குப் புலனாகிறது. கண்ணன் மேற்கொண்ட தொழில் ஆனந்தமான தொழில் மட்டுமல்ல,— சமூக வாழ்வுக்கே ஜீவாதாரமான தொழில். ஒரு நாட்டின் செல்வங்களுக்குள்ளே சிறந்த செல்வம் கால்நடைச் செல்வமே யாகும். உணவு தரும் நிலத்தை உழுது பண்படுத்துவது மாடு; நிலச் செழிப்புக்கு இன்றியமையாத உரம் அளிப்பது மாடு. மனித உணவுக்குள்ளே அமுத உணவாகிய பால் தருவது பசு மாடு. "ஆவுக்கு அளிக்கும் ஒரு பிடி புல் இறைவனுக்கே உகந்ததாகும்" என்றனர் பெரியோர்.

அத்தகைய கால்நடைச் செல்வத்துக்கு இந்தியாவில் இப்போது பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மாடுகளின் எண்ணிக்கை மளமள வென்று குறைந்து வருகிறது. விலையோ கிடுகிடு வென்று ஏறி வருகிறது. சில இடங்களில் போன வருஷத்துக்கு இந்த வருஷம் மாட்டின் விலை ஒன்றுக்கு ஐந்து மடங்கு அதிகமாகி யிருப்பதாக அறிகிறோம்.

தேசத்தில் கொடிய உணவுப் பஞ்சம் வராமல் தடுக்க வேண்டுமானால், சர்க்காரும் ஜனங்களும் கால் நடை வளர்ப்பில் உடனே அதிக கவனம் செலுத்த வேண்டும்.



நம்பிக்கை!
வந்த விருந்தினரை நரஸூஸ் காபி அளித்து உபசரித்திருக்கிறாள். அவர்கள் அதை வெகுவாக விரும்புவார்களென்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். நரஸூஸ் காபி, டீ மிகச் சிறந்தவை என்பது விஷயமறிந்த வீட்டு எஜமானிகளுக்குத் தெரிந்தது தானே!
நரஸூஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
★
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK 20

22-8-1944 மாலை	...	ஆலத்தூர் சகோதரர்கள் (தகுந்த பக்க வாத்தியங்களுடன்)	— பாட்டு
27-8-1944 மாலை	...	வேணுகான மாஸ்டர் டி. ஆர். மஹாலிங்கம்	— புல்லாங்குழல்
		கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை	— பிடில்
		தஞ்சாவூர் வைத்தியநாத அய்யர்	— மிருதங்கம்
2-9-1944 மாலை	...	ஸ்ரீமதி சாந்தா	— நடனம்
3-9-1944 மாலை	...	ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் & பார்ட்டி	— பாட்டு
9-9-1944 மாலை	...	ஸ்ரீமதி பந்தநல்லூர் ஜெயலக்ஷ்மி & பார்ட்டி	— பரத நாட்டியம் & அபிநயம்
10-9-1944 மாலை	...	சங்கீத வித்வான் செம்மங்குடி சீனிவாச அய்யர்	— பாட்டு
		மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்
17-9-1944 மாலை	...	ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் & பார்ட்டி	— பாட்டு

டிக்கட் விவரங்கள் :

	ரிஸர்வ்டு	முதல் வகுப்பு	இரண்டாம் வகுப்பு
மெம்பர் அல்லாதவர்கள்	ரூ. 30/-	ரூ. 25/-	ரூ. 15/-
மெம்பர்கள்	ரூ. 20/-	ரூ. 15/-	ரூ. 10/-(மாதாந்திரக் கட்டணம் உள்பட)
தினசரி விகிதங்கள்	ரூ. 5/-	ரூ. 3/-	ரூ. 1/-

(ஆகஸ்டு 6-ம் தேதி 8-ம் தேதி கச்சேரிகளுக்கு தனி சார்ஜ்) — 10 வயதுக்குட்பட்டவர்களுக்கு முழு ஸீஸன் கச்சேரிகளுக்கும் ரூ. 5/-

ஒலி பரப்பி ஏற்பாடுகள் ரேடியோ சேல்ஸ் & ஸர்வீஸால் அமைக்கப்படும்.

மின்சார ஏற்பாடுகள் வில்வநாதம் கம்பெனியாரால் செய்யப்படும்.

டிக்கெட்டுகள் மயிலை சங்கீத சபா — 96, பிராடீஸ் ரோடு, மயிலாப்பூர் — காரியாலயத்தில் கிடைக்கும்.

உங்கள் இடத்திற்கு முன்னதாகவே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

குறிப்பு:—ஸீஸன் டிக்கட்டுகள் வாங்காத மெம்பர்கள் மாதாந்திர டிக்கெட்டைக் காட்டினால் கீழ்க்கண்ட கச்சேரிகளுக்கு மட்டும் அனுமதிக்கப் படுவார்கள்.

ஜுலை	—	16ம் தேதி	30ம் தேதி	
ஆகஸ்டு	—	4ம் தேதி	8ம் தேதி	
செப்டம்பர்	—	2ம் தேதி	3ம் தேதி	17ம் தேதி

S. சத்யமூர்த்தி, M. D. கிருஷ்ணமூர்த்தி

கௌரவ காரியதரிசிகள்

மயிலை சங்கீத சபா.

மயிலை சங்கீத சபா - மயிலாப்பூர்

இரண்டாவது ஸிரிஸ்

16-7-1944 மாலை 5-30 மணிக்கு ரைட் ஆனரபிள் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அவர்கள் P. C., C. H. தலைமையில் ஸிரிஸின் ஆரம்பத் திறப்புவிழா.

16-7-1944 மாலை	6 மணிக்கு	சங்கீத கலாநிதி மூசிரி சுப்பிரமணிய அய்யர்	— பாட்டு
		மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்
		வில்வாத்திரி அய்யர்	— கடம்
23-7-1944 மாலை	6 மணிக்கு	கான கலாதர மதுரை மணி அய்யர்	— பாட்டு
		கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்
30-7-1944 மாலை	5-30 மணிக்கு	காயனபடு கீர்த்தனபடு ஸ்ரீமதி ஸரஸ்வதி பாயின்—ஹரிகதா காலக்ஷேபம் (ருக்மணி கல்யாணம்)	
4-8-1944 மாலை	6 மணிக்கு	சங்கீத வித்வான் ஜி. என். பாலசுப்ரமண்யம்	— பாட்டு
		மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்
		மதராஸ் வேணு நாய்க்கர்	— கஞ்சிரா
6-8-1944 மாலை	6 மணிக்கு	பம்பாய் பாய் கேஸரி பாய் & பார்ட்டி	— பாட்டு
8-8-1944 மாலை	6 மணிக்கு	பம்பாய் பாய் கேஸரி பாய் & பார்ட்டி	— பாட்டு
		(மெம்பர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்)	
13-8-1944 மாலை	6 மணிக்கு	சங்கீத ரத்நாகர அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்	— பாட்டு
		மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்
		தேவக்கோட்டை சௌந்தரராஜ அய்யங்கார்	— கஞ்சிரா
20-8-1944 மாலை	5.30 மணிக்கு	சங்கீத பூபதி மஹாராஜபுரம் விஸ்வநாத அய்யர்	— பாட்டு
		கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை	— பிடில்
		பாலக்காடு மணி அய்யர்	— மிருதங்கம்

புதிய கொலம்பியா வெளியீடு

ஜெமினி **"மங்கம்மா"** டாக்கீ பாட்டுகள்



N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்

& பார்ட்டி பாடிய




GE. 6147
பொண்ணிருக்கு
காவாலிப்பயலே

மாடர்ன் தியேட்டர்ஸ்

"திவான்பகதூர்"

டாக்கீ பாட்டுகள்



V. R. ஜீவரத்னம் & T. R. ராமச்சந்திரன்

GE. 6142 { எந்தன் ஆண்களே

GE. 6143 { என் உள்ளமிதே பாக்யமே

G. H. RAO

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

முகமது இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.
V. S. ராஜகோபாலன் கம்பெனி, சென்னை, பங்களூர், சேலம், கோயமுத்தூர்.